98

புதிய பெரிய

கட்டபொம்மு கதை

JAN 1938
MADRAS

P RM. சாமிக்கண்ணுக் கோனார் அவர்கள் இயற்றியது.

Copy Right] 1937. [விலை அணா 6

(பதிப்பாளர்)

ச. சந்தனமணியகாரர்

மதுரை.

2818

உ

சக்கம்மாள் துணை.

S. V. கணேசன், T. M. முருகாம்பாள், P. R. சிவத்தபாண்டியன்,
P. R. கருத்தபாண்டியன், P. RM. சாமிக்கண்ணுக்கோனர்

இவர்கள் பாடி நடித்துவரும்

பாஞ்சாலங்குறிச்சி சண்டை என்னும்

வீரசிங்கங்களான பூராக்கதைகள் அடங்கிய

புதிய பெரிய

கட்டபொம்மு கதை.

894.8112

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JAN 1938
MADRAS

தமிழ்நாடெங்கும் பிரசித்திபெற்ற

முத்தமிழ் க்ஷேத்திரம்,

P. RM. சாமிக்கண்ணுக்கோனர் அவர்கள்

இயற்றியது.

பிரசுர கர்த்தர்

ச. சந்தன மணியகாரர்,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

[ரிஜிஸ்டர் காபிரைட்] 1935. [விலை அணா 6.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனல் சகலமான அச்சுக்கூடத்தலைவருக்கும் பிர சுரக் கர்த்தர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் :—

தமிழ்நாடெங்கும் பிரசித்திபெற்ற முத்தமிழ் க்ஷேத் திரம் **P. RM.** சாமிக்கண்ணுக் கோனர் அவர்களால் இயற் றப்பெற்ற **"புதிய பெரிய" கட்டபொம்மு கதை** என் னும் இந்நூலை ஷையாரிடமிருந்து, சகல பாத்தியத்துடன் வாங்கி நாம் பதிப்புரிமை செய்து அச்சிட்டு வெளிப்படுத்தி இருப்பதால், இந்த **புதிய பெரிய கட்டபொம்மு கதையில்** வரும் பாட்டுகளை பிரசுரிக்கக் கூடாதென்பதை இதன்மூலம் தெரிவித்திருக்கிறேன்.

ச. சந்தன மணியகாரர்,

புக்ஷாப், புதுமண்டபம்,

மதுரை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1939
MADRAS

உ
சக்கம்மாள் துணை.

முத்தமிழ் க்ஷேத்திரம்
P. RM. சாமிக்கண்ணுக் கோனர்
அவர்கள் இயற்றிய,

பாஞ்சாலங்குறிச்சி சண்டை என்னும்
பூராக்கதைகள் அடங்கிய
புதிய பெரிய

கட்டபொம்மு கதை.

வெண்பா.

கார்தவழும் பல்லாரி கன்னல்விளை நன்னகரின்
பேர்புகழும் கட்டபொம்மு பேரோங்க—நேர்கதைக்கு
அம்பிகையா ளீன்றெடுத்த வாரமுதே வைங்கரனே
தும்பிமுகா வந்தருள்செய் துணை.

(விருத்தம்) இராகம்—பைரவி.

எட்டுத்திசையும் பதினாறு கோணமும் வெட்டிஜெயங்
கொண்டாராம் கட்டபொம்மேந்திரன்
தீரனுட பேருசொன்னால் சிட்டுப்பறவாதாம் சிறுகுருவி
நாடாதாந் தெக்ஷணபூமியில்
கறந்தபாலையுங் காகங்குடிக்காதாம் கட்டபொம்முதுரை
பேருசொன்னால்
ஒன்பதுமாதங் கெற்பங்கலங்குமாம் தம்பி ஊமத்துரையவர்
பேரு சொன்னால்
வெள்ளையத்தேவர் பேருசொன்னால் வள்ளநாட்டில்
வெள்ளைச்சீலை கட்டவே மாட்டாராம்
ஒன்பதுகம்பளமாம் பதினெட்டுத் தொட்டியரும்
உண்மையுள்ள வீரசக்கு.

செஞ்சுருட்டி.

பல்லவி.

சாமிகதிர் வேல்முருகன் சுவர்ணகிரியிலே—அருள்
சார்ந்துவிளங்குந் தெய்வச்சுந்தரச் சோதிவலையிலே

அனுபல்லவி.

வழித்தேடிப் பொன்னடி நாடிச்சங்கமும்
கூடிச் சென்றிடுங் கோடியெனவே

மாந்தரீதயத்தில் வாழும் மகுத்துவ ஸீமான்—ஆதி
மவுனஞான கெவுனநிலையில் வைத்தியக் கோமான்

இந்தமானில மீதிலேமனக் குறைதீர
வந்த கண்ணுன தெய்வமே

நித்திய கல்யாணகுண நியமனத்தாலே—இவரை
நிகர்த்ததான கடவுளில்லை இக்காசினிமேலே

அசுரர்நோக வெங்கணைஏக விட்டு
விண்ணவர்க டங்களைக் காத்திடும்

ஷண்முக சடாக்ஷரஞ்சேர் சற்குருநாதா—சிறு
தாஸன்சுப்பையன் ஓதுஞ்செந்தமிழ்க் கேயருள்போதா.

தோட்டியர்வாசல் காத்திருக்கும் என்னைப் பெற்றுளே
தாயேதுரைமகளே பாஞ்சாலி.

காப்பு

தன்னன ஞுதன தன்னஞுனே
தன்னன ஞுதன தன்னஞுனே.

அரசமரத்தடிப் பிள்ளையாரே ஆனைமுகநல்ல விக்கினரே
வில்வமரத்தடி விநாயகரே வேரவினைகளு மண்டிடாமல்
தும்பிமுகத்தோனே வந்தருள்செய் துரைமகன்கதையை நான்படிக்க
விக்கினங்களொன்றும் வாராமல் விநாயகரேநீயும் முன்னடவாய்
ஆறுமுகநல்ல வேலவரே அச்சுதருட மருகஞரே
வள்ளியைக்கண்டு மணம்புரிந்த மகாதேவருட தன்மகனே
இக்கதையை யான்பாட இன்பமுடனுக என்னுவில்

ஒக்கவேவந்து குடியிருந்து உண்மையுரைக்கனும் வேலவரே
வாணிநல்ல சரஸ்வதியே மரையவனுருட தேவியரே
பாலும்பழமுமே சர்க்கரையும் பருத்தவிளாம்பழந் தன்னுடனே
கால்கண்டநாழிகை நேரத்திலே கடுகஉனக்குப் படைத்திடுவேன்
பாடவேஎன்னுவில் வந்திருந்து பார்வதியேதாயே கண்பாரு
விரிகடலிலே பள்ளிகொண்ட வெண்ணெய்யுண்டுவந்த வாயோனே
பாற்கடல்தன்னிலே பள்ளிகொண்ட பரமசிவனுக்கு மைத்துனரே
தீர்க்கமுடனுக என்னுவில் தீவிரமாகவே வந்திருந்து
குற்றங்கள்வாராமல்கார்க்கவேணும் கொற்றவன்கதையைப்பாடுதற்கு
மஞ்சனேக்காரியே சக்கம்மாளே மதயானேக்குட்டியே ஓடிவாம்மா
பல்லாரிதேசம் பிறந்தவளே பாதுகார்க்கவேணும் உத்தமியே
போடிநாய்க்கன்சீமை யர்ண்டவளே பிரிட்டிஷார்யுத்தம் ஜெயிற்றவளே
ஆதிமனேன்மணி அம்பிகையே ஆவரங்காட்டையுங் கார்த்தவளே
பாஞ்சாலிகாட்டையும் ஆண்டவளே பக்ஷமுள்ளசக்க தேவியம்மாள்
மும்மரமானதோர் சண்டையிலே முன்னேடுந்தேவியே சக்கம்மாளே
அச்சங்குளமாம் வண்டானம் அருங்குளத்தையுங் கார்த்தவளே
அநியாயநவாப்புச் சண்டையிலே அக்கரையைவிட்டு வந்தவளே
திப்புசுல்தானுள்ள நாளேயிலே தெக்குச்சீமைக்கி வந்தவளே
தோராநல்ல வடிவழகி துரைபொம்முகோட்டையை யாண்டவளே
கொஞ்சவயது சிறுவயது குழந்தைநல்ல பிராயத்திலே
அஞ்சுவயதுப் பிராயத்திலே அரசுநிலேமையைக் கார்த்திருந்தாய்
சின்னவயது சிறுவயதில் செல்லபொம்முகோட்டையை யாண்டவளே
உந்தனே நம்பினேன் சக்கம்மாளே உலகத்தை நம்பவில்லேநான்சிறுவன்
பெத்தலிபட்டியாம் பேராப்பட்டி பேர்போசவாழ்ந்தயே சக்கம்மாளே
கோட்டைமுனியாண்டிவந்துநில்லு குடிகொண்டமுத்தையாகண்பாரு
கட்டபொம்முகதையைநான்படிக்ககருத்தில்குடிகொள்ளவேணுமையா
சந்தனமுத்தையா வந்துநில்லு சமத்தன்கதையைப் பாடுதற்கு
ஊக்கம்பிறந்திட்ட கட்டபொம்மு உத்தமன்கதையைப் பாடுகிறேன்
போலிப்புஸ்தகங்க ளேவாங்கி பிழைமோசம்போகாதீர் நேசர்களே.

கதை விபரம்.

பாடிவாரேன்தாஸன் சாமிக்கண்ணு பல்லாரிதேசத்துப் பொம்முகதை
வடக்கேநல்ல வெகுதூரமாம் விஜயநகரமாம் பட்டணத்தில்
ஆயிரஞ்சேனைகள் தன்னுடனே அரசாக்ஷிசெய்தாராம் நவ்வாப்பு
நவ்வாப்பரசாக்ஷி நாளையிலே நடந்தவிபரத்தைச் சொல்லுகிறேன்
செங்கெல்விளையுமாம் பல்லாரியில் சிற்றரசனும் கெட்டிபொம்மு
கெட்டிபொம்முதம்பி செல்லபொம்மு கீர்த்திபெற்றவர் பொம்முநாய்க்கர்
வீரமல்லுடன் திம்மியம்மாள் வெற்றியடைந்தவள் பொம்மியம்மாள்
பாலுமாடு பசுமாடுகள் பண்ணைபண்ணையாக வைத்திருக்கார்
பாலைக்கறப்பதும் விலைக்குவிற்பதும் பல்லாரிதேசம் பிழைக்கலுற்றார்
கொத்துப்பல்லாரியாங் தேசத்திலே குலதெய்வமாகிய சக்கம்மாளை
தாயைநினைத்துமே பூஜைசெய்து சங்கடமில்லாமல் வாழ்ந்துவாரார்
இப்படிவாழ்ந்துவரும்பொழுது இடுக்கம்நேர்ந்ததைச்சொல்லுகிறேன்
தோக்கலவார்குலக் கம்பளமும் துலுக்கர்ஜாதியாம் நவ்வாப்பு
ஒத்துயிருந்துமே வாழுகையில் உற்றதுசொல்கிறார் நவ்வாப்பு
பிள்ளைகளைப்பெற்றேன் மாமாவே பெரியமாப்பிளை யானதினால்
மங்களகாரியஞ்செய்யவேண்டும் மகளைப்பெண்ணுங்கொடுக்கவேண்டும்
என்றுமுரைத்தாரே நவ்வாப்பு இடைஞ்சல்வந்ததே என்றுசொல்லி
ஆனதால்நல்ல தாகட்டுமென்று அதற்குடன்பட்டார் செல்லபொம்மு
விருந்துசெய்யவும் வேணுமென்று விரும்பிச்சொன்னாராம் நவ்வாப்பு
இளந்தமுள்ளாலே கோட்டைக்காரி இப்படிமோசங்கள் வந்ததம்மா
என்றுசக்கம்மாளைத் தானினைந்து இருந்துவிருந்து செய்யும்போது
தெய்வபக்தி யுடையவர்கள் தோக்கலவார்குலக் கம்பளங்கள்
கூடைக்குள்ஜாமான் கவிழ்த்திருக்காம் குலதெய்வத்திற்குமாகாதையா
அந்தப்பொருளையுங் கண்டவுடன் அருவருப்பாகக் கம்பளங்கள்
வேயிராவேயிரா வென்றுசொல்லி விசனமுற்றுமேகம்பளங்கள்
ராஜாவிருந்துநாம் செய்யாததால் ராஜன்விரோதம் வருகுமென்று
சக்கதேவியிடம் வாக்குப்பெற்று சமத்தாய்க்காரியஞ் செய்யலுற்றார்
தெக்ஷணபூமிக்குப் போகாவிட்டால் தெத்தஞ்செய்யவேணும் நம்முயி
கம்பளத்தாரெல்லாமொன்றுகூடி காரணமாகவே என்னசெய்தார்[ரை
வடக்கேநல்ல பிறந்தவளை வலசைக்கூடையில்த் தூக்கிவைத்தார்

முன்னின்றதேவதை சக்கம்மாளை மூங்கில்க்கூடையில் தூக்கிவைத்தார்
குடிகொண்டதேவதை சக்கம்மாளை கூடைப்பெட்டியில் தூக்கிவைத்
போரானதேவியாமுத்தம்மியை பிரம்புக்கூடையில் தூக்கிவைத்தார் [தார்
ஆட்டையுமாட்டையு மோட்டிக்கொண்டு அப்போதேவாராராஞ்
செல்லபொம்மு
பாலுமாடு பசுக்களையும் பத்திக்கொண்டுவாரார் கெட்டிபொம்மு
ஏழுமாசமாங் கெற்பத்தோடு எழுந்துவாராளாம் பொம்மியம்மாள்
கோழிநல்லதோர் குஞ்சுகளும் கொண்டுமேவாராளாந் திம்மியம்மாள்
உமையவளையுந் தானினைந்து ஊரையும்விட்டுமே வாராரய்யா
தேசத்தைவிட்டுமே வாரார்களாம் தெய்வீகக்கம்பளச் சேகரங்கள்
கொத்துப்பல்லாரியை விட்டுமேதான் குடும்பத்துடனே வாராரய்யா
விடிபொழுதுமே காணுமுன்னே வெகுதூரங்களும் வந்துவிட்டார்
ஆற்றைக்கடந்து வரும்பொழுது அடங்காதகோபமாய் நவ்வாப்பு
படைஎடுத்து வருகிறாராம் பழிகாரச்சண்டாளன் நவ்வாப்பு
ஆற்றிலேவெள்ளம் வருகிறதாம் அடங்காததண்ணியுந் தள்ளுதாம்
பார்த்துக் கோபங்க ளுண்டாகி பல்லைக்கடித்தாராம் நவ்வாப்பு
திரும்பிப்பார்த்துமேசெல்லபொம்முதெய்வங்கள் தன்னையுந்தானினைந்து
அக்கடவுந்திரா நவ்வாப்பு இக்கடாவுந்திரோங் கம்பளங்கள்
என்றுமேசொல்லியே கம்பளங்கள் ஏகிநடந்தாரஞ் செல்லபொம்மு
விசனமுற்றுமே நவ்வாப்பு விஜயநகரம் போய்ச்சேர்ந்தார்
கம்பளத்தாரங்கில்லாதபடி காரணமாகவே வந்துவிட்டார்
பின்னால்நடக்கிற சங்கதியை பேரின்பமாகவே சொல்லுகிறேன்.
ஆதியில்நடந்த பொம்முகதை அன்புடன்சொல்கிறேன் நேசர்களே
காடுசெடியும் வனங்கடந்து கண்டப்பநாயக்க னூருவந்தார்
ஆறுஞ்சுனைகளுந் தான்கடந்து அழைத்துவாராராஞ் செல்லபொம்மு
பெண்டுபிள்ளைகள் தன்னுடனே போடிநாய்க்கர்சீமை தான்கடந்து
குடும்பத்தார்களெல் லோருமாக கூளப்பநாயக்க னூருவந்தார்
அநேகஊர்களைத் தான்கடந்து அன்புடனுகவே கம்பளங்கள்
மூன்றுவருடமாய்த் தானலைந்து மும்மரமாகவே செல்லபொம்மு
அச்சங்குளமாம் வண்டானம் அருங்குளத்தையுந் தான்கடந்து
அரப்பங்குளமாம் பேராப்பட்டி அடுத்துவந்தாராங் கம்பளங்கள்

ஒட்டப்பிடாரத்தைத் தான்கடந்து உள்ளமகிழ்ந்துமேசெல்லபொம்மு
செந்நெல்விளைந்து செழித்தோங்கும் செக்காரக்குடியாந் தன்னகரில்
குருமடையவுந் தானடுத்து கூடாரடோராக் குடிசைகட்டி.
கம்பளச்சேகரந் தன்னுடனே காட்டில்பசுக்களை மேய்ப்பதுவும்
ஆடுமாடுகளை மேய்ப்பதுவும் அன்புடன்பாலைக் கறப்பதுவும்
படிக்கணக்காக விற்கிறதும் பாலர்கள்தன்னுடன் வாழ்கிறதும்
செல்லபொம்முதுரை தன்வயிற்றில் ஜேஷ்டபுத்திரன் கொண்டு
[பொம்மு

குழந்தைகுட்டிகள் தன்னுடனே குடியிருந்தாராஞ் செல்லபொம்மு
ஆடுகள்மாடுகள் தன்னுடனே ஆண்டுவருகிறார் கம்பளங்கள்
இப்படிவாழ்ந்து வரும்பொழுது இனிநடந்ததைச் சொல்லுகிறேன்
எட்டியாபுரத்தை யாண்டுவருகிறார் எங்கும்புகழ்பெற்றஎட்டப்பனும்
எட்டியாபுரத்து எட்டப்பனும் கட்டியரசாண்டார் ராஜ்ஜியத்தை
ஆண்டுவருகிற நாளையிலே அவகேடுவந்ததைச் சொல்லுகிறேன்
எட்டியாபுரத்துக் காட்டுக்குள்ளே கட்டியிருக்கிற குடிசுகளை
கண்ணுலேகண்டுமே எட்டப்பனும் கடுகிவந்தாராம் பொம்மிடத்தில்
எந்தவூரையா எந்தத்தேசம் இப்படிவந்த விபரமென்றார்
வந்தவிபரத்தைச் சொல்லுகிறார் வழியுடனாகச் செல்லபொம்மு
காதினால்கேட்ட சமயமதில் கவலைப்படவேண்டா மென்றுசொல்லி
ஆருதல்தேறுதல் சொல்லியபின் ஆடுமாடுகளை மேய்க்கச்சொன்னார்
எட்டியாபுரத்துப் பண்ணைமாட்டை ஓட்டிக்கொண்டுமேய்க்கச்
[சொன்னாரய்யா

பண்ணைக்கிமாடுகள் மேய்த்தீரானால் பசியாமல்தண்ணீர் குடிப்பீரென்
சங்கராந்திநல்ல பொங்களுக்கு சரியானகொம்புக் கிடாயுடனே [றார்
நெய்க்குடமொன்றுமேகொண்டுவந்து நேராகபேட்டியுங்காணவேணும்
அப்படிச்செய்துமே வந்தீரானால் அரும்புகுறையாமல் காப்பேனென்
[றார்

அப்படியேநல்ல தென்றுசொல்லி ஆட்டுடன்மாட்டையு மேய்த்து
[வாரார்

பொம்மியம்மாளவள் பெற்றெடுத்த பொம்முதுரைமகன்கட்டபொம்மு
கட்டபொம்முதம்பி ஊமத்துரை கற்புநிலையுள்ள வெள்ளையம்மாள்

வீரமல்லுதிம்மி பொம்மியம்மாள் வேண்டிப்பிறந்தவள் முத்தியம்மாள்
அண்ணன்தம்பிதங்கை மார்களுடன் அடுத்துப்பிறந்தவர்களேழுபேரு
பேரன்பேத்திமார்கள் தன்னுடனே பேர்போகவாழ்கிருர் செல்ல
[பொம்மு

வசனம்.

இப்படியாக செல்லபொம்முதுரை வாழ்ந்துவரும் பொழுது எட்டியாபுரத்து ராஜாவுக்கு ஏற்பட்ட பகுதியை மகாராஜாவின் உத்திரவின்படி வருஷா வருஷம் தை மாசம் சங்கராந்திப் பொங்கல் தோறும் தவருமல் நடத்திவந்தார். செல்லபொம்முதுரை காலஞ் சென்றபின்பு மகன் கொண்டுபொம்முதுரை மேல்கண்ட பிரகாரம் மாமூல் தவருமல் பகுதி கட்டி வந்தார். பின்பு கொண்டுபொம்முதுரை மக்கள் கட்ட பொம்மு ஊமத்துரை இவர்கள் வாலிபர்களானவுடன் அய்யா தாங்கள் செய்துவரும் பகுதியை யெட்டியா புரத்து தாத்தாவுக்கு இந்த வருஷம் முதல், பொங்க லுக்கு நாங்கள் கொண்டுபோகின்ரேமென்று கேட்டு நெய்க்குடமொன்றும் பிருவை ஆடு ஒன்றும் கொண்டு போய் எட்டியாபுரத்து ராஜனிடம் தாத்தா தங்க ளுடைய வருஷப்பகுதியை ஒப்புக்கொள்ளுங்கள் எங் களுக்கு தங்கள்மாதிரி சரியிருப்பிடம் கொடுங்களென்று கேட்க,

எட்டியாபுரம்ஜமீன்வசனம்—உங்களுக்கு அப்படி கொடுக்கமுடியாது.

ஊமத்துரை—இனிமேல் நாங்கள் பகுதி கொடுக்க வும் முடியாது.

எட்டியாபுரம் ஜமீன்— சரி எழுந்து வெளியே போய்விடுங்கள்.

கட்டபொம்மு ஊமத்துரை இருபேரும் வேட்டையாடுதல்.

தரு—முடுக்கு.

கோபமுடனுக இரண்டுபேரும் குருமலைமேலே வேட்டையாட
அம்புவில்லுகள் தானெடுத்து அண்ணனுந்தம்பி யிரண்டுபேரும்
ஈட்டிநல்லதோர் வேலெடுத்து இடதுகைதனில் நாய்பிடித்து
கம்பளச்சேகர மத்தனையும் கம்புசமுதாடு தானெடுத்து
பண்ணைக்காட்டுச் சாயலிலே பன்றிவேட்டைகள் தான்ஜெயித்து

வசனம்.

பன்றிவேட்டைகளாடினதில் எட்டியாபுரத்தாருக்கும் கட்டபொம்மு ஊமத்துரை இவர்களுக்கும் தர்க்கம்நடந்து பின்னுல் மீறி சாலிகுளத்துக்கண்மாய்ப்பக்கம் வேட்டையாடும்பொழுது முயல் நாயை விறட்ட அதே இடத்தில் அடையாளம்வைத்து, பின்னுல் பாதர்வெள்ளையைக் காண்கிறது.

தன்னனச் சந்தம்.

ஆப்பநாட்டு மறத்திபெற்ற ஆறுவயதுள்ள பாதர்வெள்ளை
பாரமறத்தியாம் பெற்றெடுத்த பாலகனுமந்த பாதர்வெள்ளை
பூலித்தேவரு பெற்றெடுத்த புத்தியுள்ளவனும் பாதர்வெள்ளை
தகப்பன்சொல்ப்படி கேள்க்காமல் தனிவழியவன் போகையிலே
கோபமுடனுகப் போகையிலே குருக்கேநல்லதோர் ஓடையிலே
ஓடி இறங்கினுன் பாதர்வெள்ளை ஊக்கமுடனுகச் சேர்தனிலே
சேரிலகப்பட்டுப் பாதர்வெள்ளை தேமித்தேமி யழுகிறுனும்
கதரியழுதானும் பாதர்வெள்ளை கட்டனுந்தம்பி இரண்டுபேரும்
கட்டனுந்தம்பி யிரண்டுபேரும் காடைவேட்டையாடி வாராரய்யா
அழுகைச்சத்தமுங் கேட்டவுடன் அண்ணனுந்தம்பி இரண்டுபேரும்
யார்பெற்றபிள்ளையோ ஓடையிலே அழுதுபுலம்புறு னென்றுசொல்லி
கைக்கொடுத்துமே கட்டபொம்மு கரையின்மேலவர் தூக்கிவிட்டு
கட்டிச்சோற்றையுந் தான்கொடுத்து கட்டபொம்முதுரை என்ன

[செய்தார்

நடந்தகாரியந் தானரிந்து நமக்குப்பிள்ளைதா னென்றுசொல்லி
பாதர்வெள்ளைதா னென்றுசொல்லி பட்டங்கொடுத்தாராங் கட்ட
[பொம்மு

வசனம்.

கட்டபொம்முதுரை ஊமத்துரை இவர்கள் இரண்டுபேரும் வெள்ளையனைக் கூட்டிக்கொண்டுபோய் பிள்ளையாகவைத்து கோட்டைகட்டி அரசாக்ஷி செய்து வருவது.

ஷை சந்தம்.

பக்கத்தில்நல்ல சுவரெடுத்து பளிங்கிக்கண்ணாடி மேடைகளும்
நாலுதிசையும் மதுவெடுத்து ரத்தினக்கண்ணாடி மேடைகளும்
எட்டுச்சுத்து மதில்க்கோட்டை இசைந்தநல்ல சிம்மாசனமும்
பத்துச்சுத்து மதில்க்கோட்டை பதுமைச்சித்திர வேலைகளும்
சுத்திநல்ல திருமதிலாம் சூழ்ந்திருக்கப் பதுமைகளாம்
பார்த்தஜனங்கள் பதுங்கும்படி பாங்குடன்கோட்டைகள் கட்டியே
கெவுனகிரியாம் பள்ளிபெற்ற கீர்த்திபெற்றவன் சுந்தரலிங்கம் [தான்
கட்டக்கருப்பணனைக் காவல்வைத்தார் கணக்கிலடங்காத கோட்டை
[யிலே
ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம் அறுபத்திநான்கு படைத்தலைவர்
அரும்புகுறையாமல்ச் சேகரித்து ஆண்டுவருகிறார் கட்டபொம்மு
செண்பகம்பிள்ளையாம் பெற்றெடுத்த தீராதிதீரனுந் தானாபதி
கணக்குவேலையாந் தானாபதி கட்டபொம்முதுரை கோட்டையிலே
தனக்குநிகரில்லை யென்றுசொல்லி தனிராஜ்ஜியங்க ளாண்டுவாரார்
இப்படிராஜிய மாளும்போது இனிநடந்ததைச் சொல்லுகிறேன்
சேனைபரிவாரந் தன்னுடனே தீவட்டிக்கொள்ளை யடிக்கிறாராம்
சீவலப்பேரிக்கும் பாஞ்சாலிநாட்டுக்குஞ் சேர்ந்தஊர்களைக் கொள்ளை
[செய்தார்
அச்சங்குளமாம் வண்டானம் அடுத்தவூர்களைக் கொள்ளைசெய்தார்

கோபாலபுர மருப்புக்கோட்டை கொண்டுபொம்முமகன் கொள்ளை
[செய்தார்
சோளபுரமாங் குரும்பூரு சொல்லாமல்கொள்ளைகள் செய்தாரய்யா
அருங்குளத்திலே கம்மம்பில்லை அண்ணனுந்தம்பியுங் கொள்ளை
[செய்தார்
பாலுமாடு பசுக்களையும் பண்ணைபண்ணையாகக் கொள்ளைசெய்தார்
ஆடுமாடுகளைத் தான்திரட்டி அடங்கலுமாகக் கொள்ளைசெய்தார்
கனத்தசேகரந் தன்னுடனே கமுதிஊரையுங் கொள்ளைசெய்தார்
தூத்துக்குடி தனில் வெள்ளைக்காரர்வீட்டில் தொண்ணூறுசாக்குப்
[பணமெடுத்தார்
கொஞ்சவயதுப் பெண்களெல்லாம் குடியிருக்கவும் ஞாயமில்லை
பெண்டுகள்பிள்ளைகள் தன்னுடனே பேர்போனகொள்ளை நடக்கிறதாம்
இப்படிக்கொள்ளைகள் செய்தாரய்யா எழில்விஜயனுஞ் சேகரங்கள்

வசனம்.

கட்டபொம்முதுரை அரசுபுரிந்து சேனை பரிவாரத்துடன் கொள்ளைகள்செய்து எட்டியாபுரத்தாருடன் பகை ஏற்பட்டு ஒப்பாத காரியங்களால் மற்ற பாளையப்பட்டாருக்கும் விரோதம் ஏற்பட்டு சென்னைக்கு காயிதம் எழுதுகிறார்.

(விருத்தம்) செஞ்சுருட்டி.

சென்னையில்வாழும் அக்கினிஜெனரல் அவர்களுக்கு
எட்டியாபுரத்து எட்டப்பராஜன் எழுதும்செய்தி என்ன,
பாஞ்சாலிநங்கரைப் பரிபாலனஞ் செய்துவரும் கட்டபொம்மு
ஊமத்துரை அவருக்குக் கணக்குவேலையாந் தானுபதி,
ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம் அரும்பு குறையாதபடி
ஆடுகொள்ளை மாடுகொள்ளை அடங்கலுங் கொள்ளைசெய்தான்,
காடுகொள்ளை வீடுகொள்ளை கட்டபொம்முதம்பி கொள்ளைசெய்தார்
ஆனதினால் துரைமார்களே இதுலெட்டர் கண்டபோது
கட்டனைப்பிடித்துத் திட்டஞ்செய்யாவிட்டால் எட்டியாபுரம்
பிழைக்காது துரை மார்களே.

வசனம்.

சென்னையில் அக்கினி ஜெனரல் லிகிதம் பார்த்த வுடன் ரைட்டன் மேஷர்த்துரையை விசாரணை செய்து வரும்படி அனுப்ப ரைட்டன்துரை புறப்பட்டு வருகிறார்.

வண்ணான் வந்தானே—என்ற மெட்டு.

வாருங்கள்பட்டாளம் வந்தொன்றாய்ச் சேருங்கள்பட்டாளம்
வாருங்கள்யாவரும் கோருங்கள்தெக்ஷணம் பாருங்கள்பாஞ்சையின்
பாதை வழிதேடி (வாரு)
பாங்குடனேகூடி பட்டாளங்காள் நெட்டாகவே
பாஞ்சை வழிதேடி (வாரு)
பாங்கான துப்பாக்கிக்கரத்தில், கரத்தில், கரத்தில்
தாங்கிவாரீர் வெகுதூரத்தில்
ஒ எஸ் ஆல் ரைட் வெறிகுட்
வேகமுடன் வாரீர் ஜோல்ஜரே விரைந்து போர்முடிப்பீர்
வித்தக னெம்பியம் பாஸ்கரன் தமிழுத்தியில் தானறிந்து (வாரு)

தன்னனச் சந்தம்.

பட்டிக்கிம் பட்டிக்கிஞ் சீட்டெழுதி பதினாறுபட்டிக்குஞ் சீட்டெழுதி
காக்காத் தோப்பினில் மீட்டிங்கிஎன்றுமே கடிதமெழுதினு
[ரைட்டன்துரை
கடிதம்பார்த்தாராங் கட்டபொம்மு கடுந்துயோசனை செய்யலுற்றார்
கட்டபொம்முதம்பி ஊமத்துரை கணக்குவேலையாந் தானாபதி
தானாபதிப்பிள்ளை தன்னிடத்தில் தந்திரயோசனை கேள்க்கலுற்றார்
துரைமார்கள் வந்திட்டா ரென்றுசொல்லி துக்கப்படவேண்டா மகா
என்று தைரியந்தானுரைத்து ஏகிநடந்தாராந் தானாபதி [ராஜா
கட்டபொம்முதம்பி ஊமத்துரை கம்பளச்சேகரந் தன்னுடனே
ஆயிரங்கம்பளந் தன்னுடனே அரும்புகுறையாமல் வந்துசேர்ந்தார்

எட்டுத்திசையாண்ட கட்டபொம்மு என்னமீட்டங்கி என்றுகேள்க
பார்த்திட்டாராமந்த ரைட்டன்துரை பதறிச்சங்கதி சொல்லுகிருர்.

வசனம்.

குற்ருலம், திருநெல்வேலி, சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், மதுரை இவ்வூர்களில் சவுரியக்குறைவாக இருக்கிறதென்று ஏமாற்றி கவுள் மோசமாக ராமநாதபுரங் கொண்டுவந்து எழுகோணச் சர்ஜ்ஜினில் அடைத்து மீட்டங்கி விசாரணை செய்கிருர்.

(ஷை சந்தம்)

ராமனுதபுரம் மீட்டங்கிஎன்றுமே ரைட்டன்துரையவர் கொண்டுவந்
[தார்
ராமனுதபுரம் எழுகோணசர்ஜ்ஜினில் லாக்காப்செய்தாரம் ரைட்டன்
[துரை
லாக்காப்செய்துமே ரைட்டன்துரை ஞாயமனியாயங் கேள்க்கலுற்ருர்

மீட்டங்கி விசாரணை.

டான்ஸ் மேட்டு.

ரை—எப்பலாங்கொண்டனுங் காட்டுநாயக்கன்பட்டி
எல்லையில்மேய்மாட்டைப் பத்தலாமா
கட்ட—உழுவதற்குமேமா டில்லாமல்த் துரையே
ஒட்டிக்கொண்டு போனேன் கட்டபொம்மு
உழுதாய்விட்டது வேலைமுடிந்தது
ஒட்டிக்கொண்டு போகச்சொல் எட்டப்பனை
ரை—எட்டியாபுரத்துப் பால்ப்பசுவை ராஸ்க்கோல்
ஏன்பத்திப் போனாய்நீ கட்டமொம்மு
கட்ட—பிள்ளைகுடிக்கப்பா லில்லாமல்த் துரையே
பத்திக்கொண்டு போனேன் கட்டபொம்மு
பால்வற்றிப்போனது பிள்ளைபெரிதானது
பத்திக்கொண்டு போகச்சொல் எட்டப்பனை

ரை—எட்டியாபுரத்துக் கம்மங்கட்டுகளை
என்கொள்ளை செய்தாய்நீ கட்டபொம்மு

கட்ட—காடைகதுவாழிக் கிறையில்லாமல்த் துரையே
கம்மங்கட்டுகளைக் கொள்ளைசெய்தேன்

காலமழைபெய்து கம்புவிளைந்தது
கட்டிக்கொண்டு போகச்சொல் எட்டப்பனை

ரை—ஆறுமுகநதி உப்பளத்தை நான்சன்ஸ்
யார்கொடுத்தது கட்டபொம்மு

கட்ட—தனிராஜியங்க ளாண்டு வரும்போது
தாஷ்டியனுக்குக் கொடுப்பாருண்டோ

ரை—பாளையங்கோட்டையாம் ஊர்களெல்லாம் ராஸ்கோல்
பட்டப்பகலிலேன் கொள்ளைசெய்தாய்

கட்ட—கோட்டைகட்டப்பண மில்லாமல்த் துரையே
கொள்ளையடித்தேனுன் கட்டபொம்மு

ரை—ஏழுவருஷத்துக் கிஸ்திப்பணம் மாதரித்சோ
ஏன்கொடுக்கவில்லை கட்டபொம்மு

கட்ட—மானம்பொழியுது பூமிவிளையுது
மன்னவன்காணிக்கி ஏதுகிஸ்த்தி

உழுதுபறம்புக ளடித்தீர்களா
உளப்பெருமையை மேய்த்தீர்களா

ரை—இப்படியனியாயம் பேசுவதால் ராஸ்கோல்
எட்டிப்பிடித்தேகா னுன்மடியை.

தன்னனச் சந்தம்.

கட்ட—காசிதொடுத்துமே கன்னியாகுமரிவரை கட்டபொம்மு
[முந்தியைத் தொட்டதில்லை
இப்படிமோசங்கள் செய்தாரென்று ஏங்கியழுகிறார் ஜெயிலதனில்
அண்ணனுந்தம்பி யிரண்டுபேரும் அழுதுபுலம்பியே என்னசெய்தார்
காலாண்டிக்குடும்பன் பெற்றெடுத்த கட்டக்கருப்பணா ஓடிவாடா
கட்டக்கருப்பணன் தன்னிடத்தில் காயிதங்கொடுத்துத் தானனுப்ப

காயிதங்கொண்டுமே சுந்தரலிங்கம் கடுகிப்போரானும் வள்ளநாடு
வள்ளநாட்டுக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் வள்ளசிங்கக்குட்டி பாதர்
[வெள்ளை
இலங்கைதேசத்திற் கிந்திரஜித்து பாஞ்சாலிநாட்டுக்குப்பாதர்வெள்ளை
காயிதங்கண்டதோர் நாளிகையில் கண்கள்சிவந்துமே பாதர்வெள்ளை
பேர்போனபட்டாவைக் கையிலெடுத்து பேக்குதிரையின் மேலேறி
பக்ஷிபறந்தது போல்க்குதிரை பறந்துவருகுதாம் பேக்குதிரை
கரிசல்காட்டுப் பாதைவழி கடுர்தூசியாகுதாம் முன்னாலே
ராமனாதபுரம் நேர்பிடித்து ரைட்டன்துரை யிருக்குமிடம்
கட்டுக்கடங்காதகட்டபொம்மை கண்ணாலேகண்டாராம்பாதர்வெள்ளை
அடைத்திருந்ததைக் கண்டவுடன் ஆங்காரக்கோபங்கள் தன்னுடனே
குதிரையைவிட்டுமே தானிரங்கி கோடையிடிபோன்ற பாதர்வெள்ளை
சில்லுச்சில்லா வுதிரும்படி சிதறவுடைத்தாராஞ் ஜெயிலதனை
கல்க்கோட்டைபூரு நொறுக்கிவிட்டு கட்டியமுழுகிறுர் பாதர்வெள்ளை
குதிரைக்கால்தனில் கத்திகட்டி கும்பினிச்சண்டை நடத்தினாராம்
பட்டாளம்வெட்டி வரும்பொழுது பட்டத்தரசியாம் வெள்ளையம்மாள்
வெள்ளையம்மாளைச் சிறைஎடுத்து வள்ளநாட்டுக்கு வந்துவிட்டார்
இப்படிச்சண்டை நடந்ததின்பின் இனிநடந்ததைச் சொல்லுகிறேன்.

வசனம்.

ராமநாதபுரம் மீட்டிங்கியில் தனியாகத் தானுபதிப் பிள்ளை அகப்பட்டுத் துன்பமடைந்து சென்னபட்டணம்போய்த் திரும்பிவந்து கெட்ட எண்ணங்கொண்டு மகனுக்குக் கலியாணம் செய்யவென்று கும்பினியர் கரிசல்க் கொட்டாரம் நெல்லுகளைக் கொள்ளைசெய்து கும்பினிப்பகை செய்ததால் ஏற்பட்ட பாண்டியத் தேவர் சண்டை.

பல்லவி.

தொழிலோன் தலைவிநிலை பழமுதிர்சோலை
முருகா பாக்யம் (பிறவிக்கொரு)

அனுபல்லவி.

பொழிலோக சருணக் கருணைமழை புடைக்கல அடைக்கலமே (பிற)

சரணம்.

நாதாதிரு ஞானபண்டிதனே நடமயில் ரஞ்சிதனே
வேதநாயகா திருக்கழுகாசல வேடுவர்பணிவதனே (பிற)
கீதாமிர்தம் பிரகிர்தமாம்பழம் கிணிமணி வேல்ச்சாமி (பிற)

தானுபதிக்கும் கட்டபொம்முக்கும் தர்க்கம்.

தன்னனச் சந்தம்.

தானு—ஆண்டவரேத் துரைப் பாண்டியரே
அடியேன்வந்தனம் பிள்ளைமகன்
கட்ட—வாரும் வாருமய்யாத் தானுபதி
வந்ததேஇப்போது நல்லவேளை
தானு—ஆனலிருக்கட்டும் மகாராஜா
அடியேனென்றுநான் சொல்லுகிறேன்
நான்பெற்ற பிள்ளைக்குக் கலியாணம்
நடத்திக்கண்ணாலே பார்க்கவேண்டும்
சிலவுக் கோராயிரம் பொன்வேண்டும்
செல்வக்கலியாணஞ் செய்வதற்கு
கட்ட—காவல்க்காரவெள்ளை கலியாணத்திற்காக
கலஞ்சியநெல்லெல்லாந் தீர்ந்துபோச்சு
ஐநூறுகோட்டைநெல்த் தானிருக்கு
அன்புடன்கலியாணஞ் செய்துகொள்ளும்
தானு—ஐநூறுகோட்டைநெல்த் தந்தீரானல்
அரண்மனைவிருந்துக்குக் காணதையா
ஆயிரங்கோட்டைநெல்த் தந்தீரானல்
அருமைக்கலியாணஞ் செய்திடலாம்

கட்ட—ஆயிரங்கோட்டைநெல் வேண்டுமானல்
ஆருடதாலியை யறுக்கிறது

தான—எழுநூறுகோட்டைநெல் வேண்டுமையா
இன்பமாய்க் கலியாணஞ் செய்வதற்கு

கட்ட—எழுநூறுகோட்டைநெல் வேண்டுமானல்
எவருடதாலியை யறுக்கிறது

தான—ஒப்பில்லாதநெல்லுத் தந்தீரானல்
ஊருவிருந்துக்குக் காணுதையா

கட்ட—ஊருவிருந்துக்குக் காணுவிட்டால்
ஊராருட்தாலியை யறுக்கிறதா

தான—கரிசல்க்கொட்டாரங் கும்பினியர்நெல்லு
கணக்கிடலங்காமல் தானிருக்கு

கட்ட—கும்பினியர்நெல்லைக் கொள்ளைசெய்து
கோட்டைக்கபகேடு செய்யலாமா

தான—கோட்டைக்கபகேடு செய்யமாட்டேன்
கொடுமுடியானவர் தானபதி

கட்ட—வெள்ளைஓலை எழுதிவைப்பீர்
வினைவந்தபோதே ஓடிப்போவீர்

எனக்குத்தெரிந்ததைச் சொன்னேனய்யா
உமக்குத்தெரிந்தபடி செய்துகொள்ளும்.

வசனம்.

கட்டபொம்மு, தானபதியிடம் சங்கதி சொல்ல, தானபதிகேளாமல்கெட்ட என்னங்கொண்டு ஆயிரங் கம்பளம் நூறுபரிவாரத்துடன் பாளையங்கோட்டை சென்று பாண்டியத்தேவருடன் போர்புரிதல்.

பாண்டியத்தேவர், கருப்பணத்தேவர், வேலாண்டிக்குடும்பன்
இம் மூன்றுபேர்கள் காவல் தர்பார்.

விருத்தம்.

இராகம்—கேதாரம்.

மட்டில்லாப் புகழ்படைத்த மன்னவன் யீஸ்ட்டுஇண்டியன்,
பட்டரைநெல்க் காவல்செய்த பாண்டியத்தேவர் பேருசொன்னால்,
பக்ஷிபறவாது பாளையங்கோட்டை கிடுகிடென்னும் பட்டரைநெல்க்
[காவல்தன்னில்,
கருப்பணத்தேவர் பேருசொன்னால் காகம்பறவாது
கருங்குருவி நாடாது கரிசல்க்கொட்டாரம்நெல்க் காவல்தன்னில்,
வேலாண்டிக்குடும்பன் பேருசொன்னால்
வேங்கைபதுங்குமாம் வீரனுட காவல்தன்னில்.

தன்னனச் சந்தம்.

பாண்டியத்தேவரென்று பேருசொன்னால்
பாளையங்கோட்டை கிடுகிடென்னும்
கருப்பணத்தேவ ரென்றுசொன்னால்
கரிசல்க் கொட்டாரங் கிடுகிடென்னும்
வேலாண்டிக்குடும்பன் பேருசொன்னால்
வேங்கைபதுங்குமாங் காவல்தனில்
பாண்டியத்தேவருட உத்தரவன்னியில்
பட்டரைவாசல்த் திறக்கவேண்டாம்
கும்பினியாருட உத்தரவன்னியில் கொறிக்கநெல்லுக்
கொடுக்கவேண்டாம்
கருப்பணத்தேவருட உத்தரவன்னியில்
கரிசல்க்கொட்டாரந் திறக்கவேண்டாம்.

வசனம்.

பாண்டியத்தேவர் தலைமுழுகுவதற்காக, கருப்பணத்தேவர், வேலாண்டிக்குடும்பன் இவர்களிரண்டு பேர்களைக் காவல் வைத்துவிட்டு வீட்டுக்குப் புறப்படுதல்.

செஞ்சுருட்டி.

கள்ளுச்சாராயங்கலந்து குடிப்பவர்க் கொருநீதி—நான்
கலருவேனிச்செய்தி அதைக் கருதுவோ தோர்க்கியாதி—பித்த
காங்கையாலுண்டாகும் வயிற்றுக் கடுப்பெனும் வியாதி

அல்லையிலேபிடித்துக்கொண்டு மாட்டிவைத் திடுமுயிரை—அது
தான் கழுத்துக்கயிரை எங்கு மாகுங்கெட்டபெயரை
அன்றிலுங்கேளாது சொல்வேன் எறியும்பெற்றவள்வயிரை

காலைஉச்சிமாலைமூன்று வேளையு மதேஜோலி—அதைக்
கவர்ந்திடுமனக்கோளி அதைக் காண்பவர்க்கொருகேலி—கையில்
காசில்லையாவிலைப்படுஞ் செட்டி கடையில்ப்பெண்டீர்தாலி

போதைஉச்சிக்கேரஏர போகும் வாலைமுருக்கி—உதை
பொரியல்வாங்கும்நெருக்கி இரு புரத்துமீசையைத்திருக்கி
போட்டுப்பாரு மென்றுபஸ்க்கி போடுமுடான்கிருக்கி

அக்காளென்றுந் தங்கைஎன்றும் அறிவதொன்றுமில்லை—அறி
யாமல்ச் செய்ததொல்லை போதை யாகுங்கெட்டகள்ளை
அன்றிலுங்கேளாது பெரியோ றுரைத்தசொல்லை

இப்படிக்கிப் பலவிதமாய் இருக்கு திதன்யோக்யம்—இதில்
ஏதுண்டுங் கான்சிலாக்யம் எம் யி எம் பாஸ்கரன்வாக்யம்
இந்தியாவில் காந்திமகான் ஏற்பதுசொல்வாக்யம்.

வேலாண்டிக்குடும்பன் தர்பார்.

தங்கரத்தின மெட்டு.

சொல்லுவேன் கேளுங்களே சோதரரே எங்களய்யா
அல்லும்பகலுமாகஎன் தங்கமே கட்டழகி
அன்புடனே காவல்செய்வேன்என் குங்குமாப்பொட்டழகி

ஆசை கொடுக்குமையா அன்புடனே கொட்டகையில்
பாசத்துக் கேற்றவனுன் காப்ட்டூர் கங்கணமே
பாடிவைத்தார் சாமிக்கண்ணு சாப்டூர் மாம்பழமே

பட்டரை நெல்க்காவல் பழுதுபடா வேலாண்டி
எட்டடி வேங்கைபோலே தங்கமே கட்டழகி
இருந்து காவல்புரிவேன் குங்குமாப் பொட்டழகி

வேலாண்டிக் குடும்பனேயா வெற்றிபெற்ற சிங்கமையா
காலாண்டிக் குடும்பனுக்கு காப்ட்டூர் கங்கணமே
கணக்கிலாச் சொந்தமையா சாப்ட்டூர் மாம்பழமே.

வசனம்.

தானுபதிக்கும், கருப்பணத்தேவருக்கும், வேலாண்டிக்குடும்பனுக்கும் நெல் கேட்டதில் தாவா நடந்து போர்புரிந்து வேலாண்டிக்குடும்பன் இறந்துவிட்டான். பின் பாண்டியத்தேவர் தர்பார்.

தன்னனச் சந்தம்.

பங்குனிமாதம் பதினெட்டாந்தேதியில் பாண்டியத்தேவர் தலை [முழுக்கு
எண்ணெய்தேய்க்கிற வேளையிலே ஏகிவருகிறான் கருப்பணனும்
அய்யய்யோ மச்சானே என்னசெய்வேன் அடித்துமண்டையை [யுடைத்துவிட்டான்
பாஞ்சாலங்குறிச்சியாந் தானுபதி பாங்குடன்கம்பளந் தன்னுடனே
குடும்பன்மகனைக் கொன்றுவிட்டார் கும்பினியர்நெல்லைக் கொள்ளை [செய்தார்
காதினால்கேட்டாராம் பாண்டியனும் கண்கள்சிவக்குதா மந்தகோபம்
கோபம்பிறக்குதாங் கண்களிலே கொண்டயங்கோட்டை மறவருக்கு
யிக்கிக்கம்பியாம் வேஷ்டிகட்டி இருபுரத்திலுஞ் சுங்குவிட்டு
கோட்டுஉருமா ளிருக்கிக்கட்டி கோடாளிக்கொண்டையுந் தானுமிட்டு
பட்டுஉருமா ளிருக்கிக்கட்டி பட்டாக்கத்தியைக் கையிலெடுத்து
வீச்சருவாளைத் தானெடுத்து வேகமாய்வந்தாராம் பாண்டியரும்
பாண்டியன்வருகிற வேளையிலே பாஞ்சாலங்குறிச்சிக் கம்பளங்கள்
பட்டரைநெல்லெல்லாங் கொள்ளைசெய்து பாங்குடன்வருகிற [வேளையிலே

கண்டாராமந்தப் பாண்டியனும் கத்தியால் வெட்டுகிறார் கம்பளத்தை
ஓடி ஒளிகிறார் தானுபதி ஒளிந்தடிக்கிறார் கம்பளங்கள்
தனக்குநிகரில்லாப் பாண்டியனும் தட்டினார்பூங்கட்டிக் கம்புனுலே
ஓடியடிக்கிறார் பாண்டியனும் உட்கார்ந்துசண்டைகள் போடுகிறார்
வேயிராவேயிரா வென்றுசொல்லி வேகமாய்க்கம்பளஞ் சண்டை
[செய்தார்
இப்படிச்சண்டை நடக்கும்போது என்ன செய்கிறார் பிள்ளைமகன்
கண்ணுதெரியாமல்ப் போகவென்று கண்கண்டதேவதையைத் தானி
[னேந்தார்
கண்ணுதெரியாமல் நின்றிடவே கட்டபொம்முசேனை கம்பளங்கள்
வீச்சருவாளைத் தானெடுத்து வெட்டினாராமிரு துண்டாக
பாண்டியத்தேவரு மந்தநேரம் பாரமலைபோல் விழுந்திறந்தார்
பாண்டியத்தேவ றிறந்தபின்பு பாதர்வெள்ளைசண்டைசொல்லுகிறேன்.

வசனம்.

பாண்டியத்தேவரிறந்தபின்பு, தாயார் பத்தினி முத்துக்கருப்பாயிக்கு, பாளையங்கோட்டை பெரிய மக்காளி துரை சின்ன மக்காளி துரை இவர்கள் வருத்தப் பட்டு அலவுன்ஸ் கொடுத்துவிட்டு, சென்னைக்கு லிகித மெழுத, உடனே காலன் துரை புறப்பட்டு வருகிறார்.

காலன்துரை வருவது.

மண்டலங்கள் கொண்டசில லண்டனரண்மனையுலான்
மாக்ஷிமைசேர் ஐந்தாம்சார்ஜ் மன்னன்மேரி ராணியாம்
மண்டலம்பெருகவே அங்குசெங்கோல் தாங்கினார்
மட்டிலாத ரெத்னப்பீடம் மண்டபச் சிங்காதனம்
அண்டமெல்லாங் கிடுகிடென்னத் தண்டோராக் கொடுப்பாராம்
அனியாயஞ்செய் கைதிகளை ஜெயில்தனி லடைப்பாராம்.

தோகையரு.

ஒருபோதும் நமது இங்கிலீஷ்க்காரருக்கு இதுவரையில்
இடுக்கமென்பதே கிடையாது

நமது விக்டோரியா மகாராணி ஐந்தாம் சார்ஜ மன்னன்
மேரியாரிருக்கும்போது
இனிமேல் நம் இங்லீஷ்காரருக்கு என்னென்ன வந்தபோதும்
இனிவிடுவமோ பட்டாளம்.

இங்லீஷ் நோட்டு.

வர்க் ஒயில்யு வர்க் பிளே ஒயில்யு பிளே
தட்டிஸ் தி வே டு பி ஹேப்பி அண்ட் கே
ஆல் தேட் யு டூ வித் யுவர் மைட்
திங்ஸ் டன் பை ஹாவ்ஸ் ஆர் நேவர் டன் ரைட்
ஒன் திங் அட் ய டைம் அண் தேட் டன் வெல்
இஸ் ய வெறி குட் ரூல் அஸ் மேனி கேன் டேல்.

கிளிக்கண்ணி.

வாருங்கள் பட்டாளங்காள் வருசையாய் என்பிறகே
சேருங்க ளொன்றுகவே பட்டாளம் தெக்ஷணைக்குபோவதற்கு
பட்டரைநெல் கொள்ளைசெய்து பாண்டியனைக் கொன்றதினுல்
எட்டுநாள் பொழுதுக்குள்ளே பட்டாளம்
எலேலோத் தூக்கில் போடவேண்டும்
கரிசல்க் கொட்டாரம்நெல்லைக் கணக்கில்லாநெல் கொள்ளைசெய்தான்
அறியாமல் செய்ததினுல் பட்டாளம் அடக்கிவைக்கவேண்டுமிப்போ
கட்டனைப் பிடித்துநாமல் திட்டஞ்செய் தடக்காவிட்டால்
பட்டணத்தி லிருக்கலாமா பட்டாளம் பாஞ்சாலிக்கே போகவேண்டும்

தன்னச்சந்தம்.

வீரங்கள்பேசுகிறுன் கட்டபொம்மு விக்டோரியா ராணி நாளையிலே
இங்கிலீசுக்கொடி நாளையிலே இப்படியனியாயஞ் செய்துவாரான்

துப்பாக்கிக்குண்டுள்ள நாளேயிலே துஷ்டத்தனங்களுஞ் செய்துவாரா
கருமருந்துள்ள நாளேயிலே களவுகள்மெத்தவுஞ் செய்துவாரான் [ன்
காகம்பறவாத தேசமெல்லாம் கருவறுத்தவர் காலன்துரை
சிட்டுப்பறவாத தேசமெல்லாம் தேடிப்பிடித்தவர் காலன்துரை
பக்ஷிபறவாத தேசமெல்லாம் பார்த்துப்பிடித்தவர் காலன்துரை
கொக்குப்பறந்தாலுங் கூடப்பறக்கிற கும்பினிக்காரராங் காலன்துரை
பனிரெண்டுதேசம்பிடித்தவராம் பட்டணத்துக்கேப்டன்காலன்துரை
சோல்ஜர்பட்டாளந் தன்னுடனே இருக்கிப்பட்டாள மாயிரமாம்
பாவாடைப்பட்டாள மாயிரமாம் பாங்குடனுகவே கொண்டுவாரேன்
பந்தயக்குதிரை தன்னுடனே பட்டாளமாயிரங் கொண்டுவாரார்
மரம்பிடிங்கியாஞ் செடிபிடுங்கியா மன்மதனென்றொரு பீரங்கியாம்
அடுக்குப்பானேயைத் திடுக்கிண்டுருட்டுமாம் அங்கதனென்றொரு
அவுட்டுப்பீரங்கி ஆயிரமாம் டவுட்டுப்பீரங்கி ஆயிரமாம் [பீரங்கியாம்
கோட்டையைச்சுற்றிக் குமுளியடிக்குமாங் கொம்பனென்றொரு
[பீரங்கியாம்
செத்தைபிடிங்கியாஞ் செடிபிடுங்கியாந் தீரனென்றொரு பீரங்கியாம்
ஐநூறுதோட்டாவும் வாங்கிக்கொண்டு ஆங்காரமாகவே காலன்துரை
சென்னபட்டணந் தான்கடந்து செங்கல்ப்பட்டுஜில்லா நேர்பிடித்து
வெளிப்புரமுமே தான்கடந்து வேகமாய்வாராராம் பட்டாளங்கள்
கும்பகோணம்நல்ல மாயபுரம் கூடாரமோரா வடித்திருந்தார்
டீபார்ட்டிசெய்துமே பட்டாளங்கள் திருச்சிஜில்லாவைக் கண்டு
[கொண்டார்
திருச்சிஜில்லாவைத் தான்கடந்து திண்டுக்கல்வந்தாராம்
[பட்டாளங்கள்
வாருங்கள்பட்டாள மொன்றுகூடி வந்துமதுரையைக் கண்டுகொண்
[டார்.

வசனம்.

மதுரைஜில்லாவில் காலன்துரை பட்டாளத்துடன் வந்து மீனுக்ஷியம்மனை வேண்டிப் பாஞ்சாலங்குறிச்சிப் பாதர்வெள்ளை சண்டைசெய்வதற்கு உத்தரவு கேள்க்கிறுர்.

பாட்டு.

பல்லவி.

மதுரைதான் மதுரைதான்
மாதாமீனுள் வசிப்பது மதுரைதான்

அநுபல்லவி.

சதுர்யுகாதி துவாத சாந்தஸ்தலமகா குதூகுலம்
தங்கும்வைகை யாற்றினி லழகர்
சார்ந்திடுஞ் சுகாநலம்
தருவதால் அன்பு புரிவதால்
சத்யாப்பாசுர பக்திசேரறு
பத்துநான்கு திருவிளையாடலும் (மது)

மக்களின்ப மிக்கலங்க
தக்கதெய்வ சொக்கலிங்கம் (மது)

மதிமண்டல முகடண்டுத
ரளமுண்டிய புதுமண்டபம் (மது)

வடங்கண்முகில் மடந்தையர்கள்
நடம்புரியுங் கடம்பவனம் (மது)

வர்த்தகக் கோத்ர வித்வத் தோத்ர
அத்வ சாஸ்த்ர முத்தமிழ் க்ஷேத்திரம் (மது)

வதனக்காரன் வசனசீலன்
மகிமைக்காரன் மதுரைவீரன் (மது)

மம்மறை தீர்க்கும் நண்மையைப் பெற்றுல
செம்மைசீர்மாரி யம்மன் தெப்பக்குளம் (மது)

வாணிபர்க்குப காரிபத்திர
காளி யீஸ்பரி கர்ணகையானதும் (மது)

வணங்குமாதவிக் கிணங்கு கோவிலன்
மணந்த பத்தினி சிலம்பு விற்றதும் (மது)

மணிசிதம்பரேஸ் பரன்சொல் கீர்த்தனே
மகிழ்ந்துகேள்ப்பதும் புகழ்ந்துரைப்பதும் (மது)

வசனம்

காலன் துரை மீனுக்ஷியம்மனிடம் உத்தர வுகேட்டதில், அசரீரி வாக்கினல் சென்னைக்குத் திரும்ப முடியாதென்று சொல்ல, காலன்துரை துக்கப்பட்டுச் சண்டைக்குப் புறப்படுகிருர்.

தன்னனச் சந்தம்.

தெக்ஷணபூமிக்குப் போனேமானல்
சென்னைக்கித்திரும்பிச் சேரமாட்டோம்

பாஞ்சாலி நாட்டுக்குப் போனேமானல்
பட்டணந்திருப்பிச் சேரமாட்டோம்

கட்டபொம்மென்று சொல்லும்போது
கட்டைகிடந்து துடிக்கிதடா

ஊமத்துரைஎன்று சொல்லும்போது
உயிருகிடந்து துடிக்கிதடா

புலிகிடக்குதாம் பொந்துக்குள்ளே
கெலியடிக்குதடா கும்பினிக்கி

இலங்கைதேசத்திற் கிந்ரஜித்து
பாஞ்சாலிநாட்டுக்குப் பாதர்வெள்ளை

பாஞ்சாலிநாட்டுக்குப் பாதர்வெள்ளை
பட்டணந்தேசத்திற்கு காலன்துரை

பள்ளங்கண்டவிடம் பதுங்கியிருப்பானும்
பழிகார ஊமையன் சீமையிலே

இப்படி யோசனை செய்தோமானால்
எப்படிச்சண்டைகள் செய்கிறது
அத்தரிமாதரி மாதரிச்சோ
ஆனாலும்பேசுகிறேன் காலன்துரை
ஆனாலுமாகுது போனாலும்போகுது
அஞ்சாமல்வாங்களடா பட்டாளங்காள்
திருமதுரையைத் தான்கடந்து
திருமங்கலத்தையும் நேர்பிடித்தேன்
விருதுநகரை நேர்பிடித்து
வேகமாய்ப்போகுது ராணுவங்கள்
ஜல்தியில்வாருங்க ளென்றுசொல்லி
சாத்தூருத்தாலூகா கண்டுகொண்டார்
சாத்தூரில்டிபார்ட்டி செய்துகொண்டு
சமத்தன்பட்டாள மென்னசெய்தார்
எட்டியாபுரமாங் கோவிலுப்பட டியாம்
எல்லத்தருசவுங் கண்டுகொண்டார்
ஆறக்குளங்கண்மாய்ப் பாதைவழி
ஐநூறுபட்டாள மொன்றுகூடி
சாலிகுளமாம் பறம்பதிலே
சமத்தன்டேரா வடித்திருந்தார்
சண்டைக்கொடிதனை நாட்டனூற்றூர்
சாமர்த்தியமுள்ளவர் காலன்துரை
படைகுருவிபோல்க் கூடினூராம்
பார்த்திட்டோர்பயந் தோடும்படி
கூடாரடேரா வடித்துக்கொண்டு
கும்பினிக்கொடியை நாட்டிவைத்தார்
இப்படிக்கூடி யிருக்கும்போது
இனிநடந்ததைச் சொல்லுகிறேன்,

வசனம்.

காலன் துரை டோராவடித்துச் சண்டைக்குத் தயாராக யிருந்துகொண்டு கட்டபொம்முக்கு, லிகிதம் நெல்லுக்கு நெல்லுத் தருகிறயா நேருடன் சண்டைக்கு வருகிறயா தும்பினிச் சண்டைக்கு வருகிறயா, கோட்டையைவிட்டு ஓடுகிறயா வென்று யெழுத, லிகிதத்தை கட்ட பொம்மு பார்த்தவுடன் பாதர்வெள்ளைக்கு லிகித மெழுதி சுந்தரலிங்கம்வசங் கொடுத்தனுப்ப, பாதர் வெள்ளை அந்த லிகிதம் பார்த்தவுடன் வெள்ளையம்மா ளிடம் விடைபெற்றுக்கொண்டு சண்டைக்குப் புறப் படுதல்.

பாதர்வெள்ளை பராக்கிரமம்.

இராகம்—பைரவி.

பல்லவி.

மைந்தன் வந்தனமே—நல்ல
மாசபை யோர்களே ஆடையுடனின்று (மை)

நாளும்மருவிலா தரசதுபுரிந்தடும்
இறைவர்களடி இனைதனக்குமே (மை)

மிகு மாதவமே உயர் காந்தியின் நீதியும்
உலகினில் தங்கிட (மை)

அனுபல்லவி.

மந்தகாசமுள்ள மாம்பழச்சாமிக்கும்
வல்லபமாய்க்கவிசொல் சங்கரதாஸர்க்கும்

சுந்தரஞ்சேர்முத்துச் சாமிப்புலவர்க்கும்
சுகமது பெருகிட உலகினில்மகிழ்வுட னேஎந்நாளுமே (மை)

உ

சக்கம்மாள் துணை.

கட்டபொம்மு நாடகத்தில் தமிழ் நாடெங்கும் பிரசித்திபெற்ற

முத்தமிழ்க்ஷேத்திரம்

P. RM. சாமிக்கண்ணுக் கோனர்,

காலன் துரை.

சங்கம்புகழ்கூடல் சாமிபாஸ்க் கரர்க்கும்
தாஸனுனசின்னத் தம்பி தமிழுக்கும்
மங்களமாய்ப்பெற்ற மாதாபிதாவிற்கும்
வண்மையதாகவே சாமிக்கண் ணென்றிடுஞ்சிறு (மை)

பாதர்வெள்ளை—தன்னனச் சந்தம்

செம்பநாட்டு மறத்திபெற்ற
சேஷ்டபுத்திரியே வெள்ளையம்மாள்
பாரமறத்தியாம் பெற்றெடுத்த
பட்டத்தரசியடி வெள்ளையம்மாள்
நாரைபறவாத நாற்பத்தெட்டுமடை
நாட்டைஇழந்தாயடி வெள்ளையம்மாள்
கட்டபொம்மு கோட்டைக்கிமோசமென்று
காயிதம்வந்ததடி வெள்ளையம்மாள்
கும்பினியர்நெல்லைக் கொள்ளைசெய்தார்
கொடுமுடியானவர் தானுபதி
பட்டரைநெல்லெல்லாங் கொள்ளைசெய்து
பாண்டியத்தேவரைக் கொன்றதினுல்
போருவிஜயனுன் பாதர்வெள்ளை
பெல்லாதஏமனுங் காலன்துரை
பக்ஷிபறவாத தேசமெல்லாம்
பார்த்துப்பிடித்தவருங் காலன்துரை
காலன்துரைஎன்று சொல்லும்போது
காலம்முடிந்ததடி எந்தனுக்கு
யானையாய்யானும் பிறக்கும்போது
பூனையாய்ப் பிறந்தாரடி காலன்துரை
புலியாகநானும் பிறக்கும்போது
எலியாய்ப் பிறந்தாரடி காலன்துரை

சண்டைக்கிவந்தவர் காலன்துரை
சாகத்துணிந்தேனடி பாதர்வெள்ளை
காலன்துரையவர் வந்தபோது
கருமாதிக்காரியஞ் செய்யவேண்டும்
உயிரோடுகருமாதி செய்ங்களடி
ஊக்கத்துடன்சண்டை செய்வதற்கு
வாங்க வாங்களடி பெண்டுகளா
வரிசையாய் உட்கார்ந் தழுங்களடி
ஏழுபேர்கள் பெண்டுகளா
என்தனைச்சுற்றி யழுங்களடி
உள்ளூருக் குடிமகனைக் கூப்பிடுங்கள்
கொள்ளிக்குடங்களும் வைப்பதற்கு
வைகுண்டச்சல்லா எடுத்துவாங்கோ
வாய்க்கட்டுக் கைக்கட்டு கட்டுங்கடி
நிறைநாழி வைப்பதற்கு நெல்லெடுங்கள்
நேருக்குநேராக வைத்தழுங்கள்
தூண்டாமணிவிளக் கேற்றிவைங்கள்
சூரனைச்சுற்றி யழுங்களடி
கண்ணுக்குமஞ்ச ளறைத்துநீங்கள்
கட்டழகனுக்கு கொண்டுவாங்கள்
ஆவரம்பூப்போன்ற தாலிகளை
அற்றுமேகட்டுங்கடி கால்மாட்டில்
கொட்டுக்குலவையோட கட்டினதாலியை
கட்டிலுச்சட்டத்தில் கட்டிடுங்கள்
நல்லநாள்பார்த்துநான் கட்டினதாலியை
நாற்காலிச்சட்டத்தில் கட்டிடுங்கள்
ஆயிரம்பேருடன் கட்டினதாலியை
அற்றுமேபோடுங்கடி ஆறுபேரும்

பேர்போகவாழ்ந்தேனடி பாதர்வெள்ளை
பெருசொல்லவொரு பிள்ளை யில்லை
கோடையிடிபோன்ற வெள்ளையத்தேவருக்கு
கொள்ளிவைக்கவொரு பிள்ளையில்லை

தாஷ்டீகனுகவே நான்பிறந்து
தலைசிறைக்கவொரு பிள்ளையில்லை
பூமிபார்த்துப் பிறந்தவண்டி
பூலோகச்சந்திரன் பாதர்வெள்ளை

வள்ளநாட்டுக் கதிபதியாம்
வள்ளசிங்கக்குட்டி பாதர்வெள்ளை
கொண்டயங்கோட்டையர் வம்முசமாம்
கொடிப்பாம்படிநான் பாதர்வெள்ளை

காலன்துரை சண்டைக்குப் போறதினல்
கருமாதிக் காரியஞ் செய்தேனடி
போருக்குப்போரேனடி வெள்ளையம்மாள்
போய்வருவேன்விடை தான்கொடுப்பாய்
தீரன்காலன்துரை சண்டைசெய்தால்
திரும்பிவரமாட்டேன் பாதர்வெள்ளை.

வசனம்.

பாதர்வெள்ளை உயிரோடு கருமக்கிரிகைகள் முடித்து, வெள்ளையம்மாளிடம், காலன்துரையுடன் போர் புரிவதற்கு, விடைகேட்குதல்.

ஷிசந்தம்

பாதர்வெள்ளை வெள்ளையம்மாள் தர்க்கம்.

பா—போருக்குப்போரேனடி பாதர்வெள்ளை
போகவிடைதருவாய் வெள்ளையம்மாள்
வெ—கருமக்கிரிகைகள் தான்முடித்து
காலன்துரைசண்டை செய்யலாமா

பா—கருமாதிக்காரியஞ் செய்ததினல்
காலன்துரைசண்டை ஜெபமடைவேன்

வெ—துறக்கிப்பட்டாளம் வந்ததினல்
துற்குறிசோதனை கண்டேனாதா

பா—துற்குறிசோதனை கண்டதினல்
துறக்கிப்பட்டாளம் வெட்டுவேண்டி

வெ—படுத்துநித்திரை செய்யும்போது
பட்டப்பகலில்க் கனவுகண்டேன்

பா—பட்டப்பகலில்க் கனவுகண்டால்
பட்டாளஞ்சண்டை ஜெயிப்பேனடி

வெ—கண்டகனவுகளைச் சொல்வதென்ருல்
கலங்குதேநெஞ்சம் பொறிப்பொறியாய்

பா—கலங்காமல்ச் சொல்லடி வெள்ளையம்மாள்
கட்டழகன்சண்டை செய்துவாரேன்

வெ—பிச்சிமலருமே சோம்பக்கண்டேன்
பிஞ்சிட்டவாழையுஞ் சாயக்கண்டேன்

பா—பிஞ்சிட்டவாழையுஞ் சாயக்கண்டால்
பின்வாங்கேன்சண்டையில்ப் பாதர்வெள்ளை

வெ—குளிக்கமஞ்ச ளறைக்கயிலே
வழிக்கையிலேகரியாய்ப் போனதையா

பா—வழிக்கையிலேகரியாய்ப் போனலுமே
வல்லவன்பட்டாளம் வெட்டுவேண்டி

வெ—கட்டபொம்முமாமா கோட்டையெல்லாம்
கரிக்கோட்டையாகக் கனவுகண்டேன்

பா—கரிக்கோட்டையாகக் கனவுகண்டால்
கட்டழகன்பட்டாளம் வெட்டுவேண்டி

வெ—திண்டுக்கல்மலைதனி லுமத்துரைமாமா
செத்துமடிந்திடக் கனவுகண்டேன்

பா—செத்துமடிந்திடக் கனவுகண்டால்
ஜெயிப்பேன்பட்டாளம் பாதர்வெள்ளை

வெ—கோட்டையைவிட்டுமே மாமாயிருபேரும்
கோபமாய்வெளியேறக் கனவுகண்டேன்

பா—கோபமாய்வெளியேறக் கனவுகண்டால்
கும்பினிச்சண்டை ஜெயமடைவேன்

வெ—கயற்று ஆற்றிலே கட்டப்புளியிலே
கட்டபொம்முமாமா தொங்கக்கண்டேன்

பா—கட்டபொம்முதலை தொங்கக்கண்டால்
காலன்துரைசண்டை ஜெயமடைவேன்

வெ—பேர்போகவாழ்ந்தீரே என்துரையே
பேக்குதிரையுஞ் சாகக்கண்டேன்.

பா—பேக்குதிரையுஞ் சாகக்கண்டால்
பேர்போனசண்டை ஜெயிப்பேனடி

வெ—கொண்டுபொம்முமகள் வெள்ளையம்மாள்
கோலாருபட்டியில் சாகக்கண்டேன்

பா—கோலாருபட்டியில்ச் சாகக்கண்டால்
கும்பினிச்சண்டைக்கி யஞ்சமாட்டேன்

வெ—ஊமத்துரைமாமா கட்டபொம்மு
ஊரைவிட்டுஓடக் கனவுகண்டேன்

பா—ஊரைவிட்டுஓடக் கனவுகண்டால்
ஊக்கத்துடன்சண்டை செய்வேனடி

வெ—தாலிகழன்று விழுகக்கண்டேன்
தாஷ்டீகரே சண்டைக்கிப் போகவேண்டாம்

பா—தாலிகழன்று விழுந்தாலுமே
தாட்டியன்பட்டாளம் வெட்டுவேண்டி

வெ—ஆகாதசொற்பனங் கண்டதினால்
ஆண்டவரே சண்டைக்குப் போகவேண்டாம்

பா—என்புத்திகேள்ப்பவர் கோடாகோடி
பெண்புத்திகேள்ப்பேனே பாதர்வெள்ளை

போரதுபோரேனடி வெள்ளையம்மாள்
போக்குத்தண்ணீருங் கொண்டுவாடி

தாகத்திற்குத்தண்ணீர் கொண்டுவரும்படி
தாஷ்டீகன்சொல்லிப் பயணம்வைத்தார்

கொண்டுவரும்படி சொல்லிவிட்டு
குதிரை யின்மேலேசவ்வாரியாம்

வாய்க்கரிசியைப் போட்டுக்கொண்டு
வள்ளநாட்டுச்சிங்கம் பாதர்வெள்ளை

கட்டக்கருப்புணன் சுந்தரலிங்கம்
கர்ரணமாக யிரண்டுபேரும்

ஏறியுட்க்கார்ந்தார் குதிரையின்மேல்
இழுத்துப்பிடித்தார் கடிவாளத்தை

வையாளியோடுதாங் காட்டுவழி
வாறிஎறியுதாம் பேக்குதிரை

ஒட்டாரங்காடு ஓடங்காடு
ஓடிவருகுதாம் பேக்குதிரை

சில்லாடங்காடு செடிக்காடு
சிட்டாய்ப்பறக்குதாம் பேக்குதிரை

காலிலகப்பட்ட கற்களெல்லாம்
கடுந்தூசியாகுதாம் முன்னாலே

பெரியபெரிய கற்களெல்லாம்
பிறண்டுஓடுதாம் முன்னாலே

ஒட்டப்பிடாரத்துப் பாதைவழி
ஓடிவருகுதாம் பஞ்சவர்ணம்

கொக்குப்பறந்தது போல்க்குதிரை
கோட்டையைவந்துமே கண்டுகொண்டு

குதிரையைவிட்டுமே தானிறங்கி
கோடையிடிபோன்ற பாதர்வெள்ளை

பட்டாக்கத்திக்கி யஞ்சாத
படுபாவிசண்டாளன் பாதர்வெள்ளை

வசனம்.

பாதர்வெள்ளை வள்ளநாட்டிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிவந்து கட்டபொம்முதுரையை வணங்கி காலன் துரையுடன் போர்புரிய விடைகேட்பது

ஷிசந்தம். கட்டபொம்மு பாதர்வெள்ளை தர்க்கம்.

பா—ஆண்டவரேத்துரைப் பாண்டியரே
அடியேன்வந்தனம் பாதர்வெள்ளை

க—வாடாமகனேநீ பாதர்வெள்ளை
வள்ளநாட்டுச்சிங்கம் ஓடிவாடா

பா—எடுத்துவளர்த்தீரே எந்தனய்யா
இடையூறுவந்ததே என்னுசெய்வோம்

க—தானுபதிப்பிள்ளை செய்தமோசம்
தாஷ்டியன்பட்டாளம் வந்திருக்கார்

பா—எங்கேயிருக்கிறுர் பட்டாளங்கள்
இக்ஷணஞ்சென்று கருவறுப்பேன்

க—சாலிகுளமாம் பறம்பதிலே
சமத்தன்பட்டாளம் வந்திருக்கார்

பா—கருமாதிக்காரியஞ் செய்துவந்தேன்
காலன்துரைசண்டை செய்துவாரேன்

க—வெள்ளிக்கிழமை பிறந்தாயடா
வெள்ளையர்சண்டைக்குப் போகவேண்டாம்

பா—வெள்ளையத் தேவர்க்கும் வெள்ளைக்காரருக்கும்
வேற்றுமை யுண்டோசொல் எந்தனய்யா

க—படுபக்ஷிநாளா யிருக்குதடா
பார்த்துமே போகலாம் பாதர்வெள்ளை

பா—எப்படிநாளா யிருந்தபோதும்
இப்பொழுதேசெல்ல வேண்டுமையா

க—இன்றைக்கிருந்துமே நாளைக்கிப் போவாய்நீ
எடுத்துவளர்த்திட்ட பாதர்வெள்ளை

பா—முன்வைத்த கால்தனைப் பின்வைக்கமாட்டாத
மூர்க்கக்குண முள்ளவன் பாதர்வெள்ளை

க—தகப்பன்சொல் தட்டாதே என்மகனே
தாஷ்டிய னின்றைக்கிப் போகவேண்டாம்

பா—காலன்துரைமே லிருக்குங்கோப முன்னைக்
கத்தியால்வெட்டுவே னிக்ஷணமே

க—நல்லதுநல்லது என்மகனே
நடத்துன்மனம்போல் போர்க்களத்தை

பாதர்வெள்ளை கட்டபொம்மு ராஜனிடம், விடைபெற்று காலன்துரையுடன் போர்புரிதல்.

ஜடகட்டாமீசையைத் தான்முருக்கி
சாமிபாதர்வெள்ளை என்னசெய்தார்

ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரம்
அரும்புகுறையாமல்ச் சேகரித்து

போருக்குப்போராரும் கம்பளங்கள்
பொல்லாதஎமனுங் காலன்துரை

நாலுபக்கமும் பீரங்கியை
நட்டுவைத்திருக்கார் பட்டாளங்கள்

பீரங்கிவாய்தனில் குண்டுவைத்து
பேர்பட்டபட்டாளங் தானிருத்தி

கும்பினிப்பட்டாள மொன்றுகூடி
கூசாமல்சண்டைகள் செய்கிறாராம்

கட்டபொம்முதுரை சேனைகளும்
கனத்தைசண்டைகள் செய்கிறாராம்

கும்பினிச்சண்டைகள் செய்வதற்கு
கொம்பானைக்குட்டியாம் பாதர்வெள்ளை

ஊக்கமுடனே விரட்டுகிறார்
ஓடிஒளியுதாம் பட்டாளங்கள்

வீசிவீசியே வெட்டுகிறார்
வீரன்காலன்துரை பட்டாளத்தை

சோல்ஜர்பட்டாளம் வெட்டியபின்
துஷ்டர்காலன்துரை எங்கேயென்று

தேடிவருகிறார் பாதர்வெள்ளை
சென்னைக்கதிபதி காலன்துரை

பள்ளங்கண்டவிடம் பதுங்கியிருந்துமே
பட்டணத்துக்கேப்டன் காலன்துரை

தேடிவரும்பாதர் வெள்ளையனை
திடீரென்று சுட்டாராங் காலன்துரை

பார்த்துவிட்டாரந்தப் பாதர்வெள்ளை
பட்டாக்கத்தியைத் தானெடுத்து

ஒளிந்துசுட்டாராங் காலன்துரை
ஓடியேவெட்டினான் பாதர்வெள்ளை

காலன்துரைகுண்டு போட்டதினால்
கதறிவிழுந்தாராம் பாதர்வெள்ளை

தட்டுத்தடுமாறிக் கீழ்விழுந்து
தாயைநினைத்துமே சக்கம்மாளை

கும்பினிவெற்றி யடைந்ததினால்
கோட்டைக்கபகேடு வந்ததென்று

தகப்பன்சொல்கேளாமல் வந்ததினல்
தன்னுயிர்க்குமோசம் வந்ததென்று

கோட்டைபடுத்துமே போகையிலே
குளிர்ந்தபுளிய மரத்தடியில்

செத்துமடிந்தாராம் பாதர்வெள்ளை
சிவலோகஞ்சேர்ந்தாராம் நேசர்களே.

வசனம்.

பாதர்வெள்ளை இறந்தவுடன், காலன்துரை பட்டாளம் இறந்ததை நினைத்து வருத்தப்பட்டுக் காலன் துரையும் இறந்துவிடுகிருர்.

பண்டிதமோதிலால்—என்றமெட்டு.

டல்லவி.

பட்டாளம் பறிகொடுத்துப் பரதவிக்கின்றேன்
பரதவிக்கின்றேன் நின்று பரதவிக்கின்றேன் (பட்)

அனுபல்லவி.

கட்டன்ஊமத் துரையின்தேசம் கடுகிவந்த தாலேமோசம்
மட்டிலாப்பட் டாளமொன்ருய் மாண்டதய்யய்யோ
மாண்டதய்யய்யோ ஒன்ருய் மடிந்ததய்யய்யோ (பட்)

தோகையரு.

ஆயிரம் பட்டாளத்திற் கதிபதியாகிய மகாசுத்த தீரவீரன்
அரே பாயிரே பட்டாளமொன்ருய் மாண்டபோது
பதைக்குதே எந்தனுவி எந்தனுவி எந்தனுவி
இனி சென்னைக்குப் போவதைப் பார்க்கினும் இந்தத்
தீராதிதீரன் பாதர்வெள்ளையிடம் செத்துமடிவது நலமே.

பாட்டேடுப்பு.

அய்யோநா னென்னசெய்வேன் அறியாத சீமையிலே
பெரியகேப்ட னென்றுரைத்த பேரும் போச்சுதே
பேரும்போச்சுதே சர்ப்பிகேட் கோரும்போச்சுதே (பட்)

வசனம்.

காலன்துரையுடன் பாதர்வெள்ளை யிறந்தவுடன் கட்டபொம்மு ஊமத்துரை இருவர்களும் அழுது துக்கப்பட்டு வெள்ளையம்மாளுக்குத் தகவல் தெரிவிக்க, வெள்ளையம்மாள் வந்து உடன்கட்டை ஏறுதல்.

வெள்ளையம்மாள் ஒப்பாரிக்கண்ணிகள்.

காகத்துக்கண்ணாடி நான் கண்ணுஞ்சரவிளக்கு
காத்தடித்து மங்காமல் நான்வாழ்ந்த மன்னவரே
கவலைப்பட்டு மங்குறேனே.

தூரத்துக்கண்ணாடி நான் தூண்டாமணிவிளக்கு
தூசிபட்டு மங்காமல் உங்களாலே நான்
துயரப்பட்டு மங்குறேனே.

கோம்பைமலையும் கொடிக்கொரு ஊரணியாம்
குருவைப் பணிந்தேனே கோடிதவம் பெற்றேனே.

சங்குமலையும் சபைக்கொரு ஊரணியும்
சபையைப் பணிந்தேனே தக்கவரம் பெற்றேனே.

கூட்டமரம் காத்தடிக்க கொப்போடே கொப்புரச
தனிமரமாய் நின்றல்லவோ தயங்கி யழுகிறேனே.

கல்லிழைத்த திண்ணையிலே பொன்னிழைத்த பாய்போட்டு
காரடு எழுதி கடதாசி மைதடவி
சீமைக் கடதாசி சிக்கிரமாய் வந்ததென்று
சேவுகன் கொண்டுவர சிரித்து மகிழ்ந்திருந்தேன்
அப்பனுட ஓலையென்று ஆசை அடைந்திருந்தேன்
சித்தப்பன் ஓலையென்று சிந்தை மகிழ்ந்திருந்தேன்
பெரியப்பன் ஓலையென்று பெருமை அடைந்திருந்தேன்
அண்ணனுடை ஓலையென்று ஆனந்தங் கொண்டேனே
தமயனுட ஓலையென்று தயிரிய மாயிருந்தேன்
கணக்கனைத் தானழைத்து கடதாசி யைப்பிரித்து
கவனமாய்ப் பார்க்கையிலே கைகலந்த மணவாளர்
கணவ ரிறந்தாரென்று கடதாசி செப்பிருச்சே.

தூர வெளிசேதி சுருளோலே கண்டவுடன்
சுருக்காய்ப் பயணமென்றேன் தோணியுந் தாமதமே.

காத வெளிசேதி கடதாசி கண்டவுடன்
கடுகப் பயணமென்றேன் கப்பலுந் தாமதமே.

என்னைக்குஞ்சிருடையாள் இருப்பாரென்று எண்ணிருந்தேன்
எமலோகஞ் சேர்வாரென்று எடுத்துமே பார்த்தானே.

எமன் அழைத்தானே ஏட்டெடுத்துப் பார்த்தானே
காலன் அழைத்தானே கணக்கெடுத்துப் பார்த்தானே.

தூதன் அழைத்தானே சுருளெடுத்துப் பார்த்தானே
சித்ரபுத்ர நயினரோட சேர்ந்ததோ உன்கணக்கு.

ஆரைச் சதமென்பேன் அன்னியரைத் தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத் தஞ்சமென்பேன்.

கடுகு நிறங்குலைந்தேன் கஸ்தூரி வாசங்கெட்டேன்
மிளகு நிறங்குலைந்தேன் முல்லைப்பூ வாசங்கெட்டேன்.

கரையோரம் நாத்தாங்கால் கன்றுதின்னால் கேள்வியில்லை
மடையோரம் நாத்தாங்கால் மாடுதின்னால்கேள்வியில்லை.

மயிலுங் குயிலும்போல் மருவி விளையாண்டோம்
மயிலுஞ் சிறகொடிய மாடப்புறு துண்டுபட்டேன்.

குயிலும் மயிலும்போல் கூடி விளையாண்டோம்
குயிலுஞ் சிறகொடிய கூட்டுப்புறு துண்டுபட்டேன்.

கட்டிலுச் சட்டமே கனத்த வயிரமே
அசையா வயிரமே அருபதடிக் கம்பமே
பட்டுக் கயிரே பணமிருக்கும் பெட்டகமே
தொங்கி வயிரே துரைராஜா மாண்டியலோ.

அயிலா ஒயிலழகும் ஆசாரக் கைவீச்சும்
அம்ஸமலர் மெத்தையிலே அணைந்திருப்ப தெக்காலம்.

நின்றால் நிழல்தெரியும் நீலமணிக் கூடாரம்
நினைத்தால் வயிரெரியும் நிமலர்செய்த வண்கொடுமை

அல்லிய தேமலுக்கும் அழகுதிரு மேனிக்கும்
அர்ச்சுனரைப்போல அவணியிலே காண்பதெப்போ.

ஆலிலை போலே அடிவயரு மேவயரும்
வேப்பிலை போலே மேப்பிருவம் கீப்பிருவம்
மூன்றும் பிரைபோலே மூக்குத் திருவழகும்
நடந்தா நடைகுலுங்கும் நாகரீகஞ் சூழ்ந்து நிற்கும்
காலையிலே ஸ்நானம்பண்ணி காரிக்கன் வேஷ்டிகட்டி
கைகட்டி நின்று கடவுளை தோத்தரிக்கும்
கணவரைப் பார்ப்பதெப்போ.

மாலைக் குளியலிட்டு மல்பீசு வேஷ்டிகட்டி
மகாபூஜைசெய்துவரும் மன்னவரைப் பார்ப்பதெப்போ.

சப்ரகூட மஞ்சனைக்கி சாயநல்ல வேஷ்டிகட்டி
சயனித்துப்போகும் சமத்துள்ளராஜாவே சயனிப்ப தெக்காலம்.

கப்பல் வருகுதென்று நான் கடற்கரைக்கிப் போயிருந்தேன்
கப்பலும் அக்கரை நான் ஆகாதபாதகத்தி
கவலைப்பட்டேன் இக்கரையே.

தோனி வருகுதென்று நான் துரைமுகமே போயிருந்தேன்
தோனியும் அக்கரை நான் ஆகாதபாவி
துயரப்பட்டேன் இக்கரையே.

நாகமலையை நகட்டிவரும் மன்னவரே
கோம்பைமலையைக் கொண்டுவரும் மன்னவரே
ஆனைமலையை அசைத்துவரும் மன்னவரே
நாறைபறவாத நாற்பத்தெட்டுமடை உங்களாலே
நானிழந்து வந்தேனே.

தன்னனச் சந்தம்.

பாரமரத்தியாம் பெற்றெடுத்த
பத்தினி உத்தமி வெள்ளையம்மாள்
இனிமேல் பூமியி லிருக்கலாமா
என்று அழுதுமே வெள்ளையம்மாள்

சந்தனக்கட்டையைத் தானடுக்கி
சமத்தன் வெள்ளையனைத் தூக்கிவைத்து

மார்பிலமைந்துமே வெள்ளையம்மாள்
மங்களஞ் சொல்லித்தீ மூட்டினளாம்

பற்றி எரிகின்ற வேளையிலே
பத்தினி உத்தமி வெள்ளையம்மாள்

உலகினில் தெய்வத்தைத் தானினைந்து
உடன்கட்டை ஏறினாள் பத்தினியும்

பத்தினியும் பர்த்தா விரண்டுபேரும்
பரமபதமே சேர்ந்துவிட்டார்

காரணவெள்ளை யிறந்ததினால்
கட்டபொம்மு கதை சொல்லுகிறேன்.

வசனம்.

பாதர்வெள்ளையுடன் வெள்ளையம்மாளும் உடன் கட்டை ஏறியபின் கட்டபொம்மு ஊமத்துரை இவர்க ளிரண்டுபேரும் துக்கப்பட்டு, கோட்டையை விட்டு பாதர்வெள்ளைக்குப் பதிலாள் தேடப் புறப்படுதல்.

ஷிசந்தம்.

க—என்னுடன்பிறந்த என்பிறவி
இப்படிவகைமோசம் வந்ததடா

ஊ—என்ன செய்குவோ மெந்தணண்ணா
ஈஸ்வரன் செய்ததோர் தீவினைக்கி

க—குப்பினிச் சண்டையில் கெட்டிக்காரன்
கோடை யிடிபோன்ற பாதர்வெள்ளை

ஊ—பட்டாளச் சண்டைகள் செய்வதற்கு
படுபாவி சண்டாளன் பாதர்வெள்ளை

க—பாதர்வெள்ளை இறந்ததினால்
பாரினில் நாம விருக்கலாமா

ஊ—பூலோகச் சந்திரனைத் தானிழந்து
பூமியில் நாம விருக்கலாமா

க—கட்டிச்சோறு கொடுத்து வளர்த்தேனே
கயிலாசம் சேர்ந்தானே பாதர்வெள்ளை

ஊ—எடுத்து வளர்த்தேனே ஊமத்துரை
எமலோகஞ் சேர்த்தானே காலன்துரை

க—பாதர்வெள்ளையைத் தானிழந்து
பட்டத்தரசரென் றிருக்கலாமா

ஊ—எதுக்கு மஞ்சவே வேண்டாமண்ணா
இருக்கிறேன் சண்டாள னூமத்துரை

க—கட்டழகனைத் தானிழந்து
கட்டைகிடந்து துடிக்கிதடா

ஊ—கவலைப் படவேண்டா மெந்தனண்ணா
கட்டபொம்மு தம்பி நானிருக்கேன்

க—பாதர் வெள்ளைக்குப் பதிலாளு
பார்த்துவரவேணு மென்பிறவி

ஊ—கோட்டையை விட்டுமே போனேமானல்
கோழிகூட மதியாதண்ணா

க—கோட்டையை விட்டுமே போகாவிட்டால்
கும்பினிக்காரர் வளைத்திடுவார்

ஊ—கும்பினிப் பட்டாளம் வந்திட்டாலும்
கொண்டு பொம்முமகன் நானிருக்கேன்

க—ஆகாத காலமும் வந்ததினால்
அரண்மனையைவிட்டுப் போகவேண்டும்

ஊ—மூத்தோர்சொல் வார்த்தை யமுர்தப்படி
மும்முரமாகப் புறப்படுங்கள்,

வசனம்.

கட்டபொம்மு ஊமத்துரை இருவரும் கோட்டையை விட்டு வெளியேறி கொலத்தூர், நாகலாதபுரம்

காலால்குடி, நத்தக்காடு, நடுக்காடு, கமுதிக்கோட்டை, காளையார்கோவில் போய், மருதுபாண்டியன் அரண்மனையில் அடைக்கலம் புகுருவதும், இவர்கள் புறப்படுவது தெரிந்து, எட்டியாபுரம் ஜெமீன் சென்னைக்கு லிகிதமெழுத, கண்ணுடி ஜெனரல் புறப்பட்டு வந்து, எட்டியாபுரத்தில் விசாரித்து ஒவ்வொரு ஜெமீன்களிடமும் கேட்டு காளையார்கோவில் மருதுபாண்டியனிடம் விசாரணை செய்து, போர்புரிந்து, பட்டாளங்கள் இறந்தவுடன் காளையார்கோவில் விட்டு வெளியேறி, இருபேரும் மல்லப்புறம் பக்கம் புறப்படுகிருர்கள்.

தன்னனச் சந்தம்.

ஆவறங்காட்டுப்பாதைவழி அண்ணனுந்தம்பி யிரண்டுபேரும் [ரும்
குதிரைமேல்நல்லசவ்வாரியாங் கொண்டுபொம்முமக்க ளிரண்டுபே
முன்னுல் நடக்குதாம் பேக்குதிரை பின்னுல் வருகுதாம் முத்துவர்ணம்
கண்டனுராம் புதுவயலாம் கானுடுகாத்தானைக் கண்டுகொண்டார்
திரும்யங்கோட்டையை நேர்பிடித்து திக்குவிஜய னிரண்டுபேரும்
மல்லப்புரங்காடு போகும்போது மத்தியானவெய்யில் தானடிக்க
தண்ணீருந்த விடமில்லாமல் தயங்கிவருகிற வேளையிலே
முத்தணத் தேவரே ழேருகட்டி மும்மரமாக வுழுகிருராம்
ஏழேரு கட்டி உழுகிரய்யா எந்தனுக்குத்தாகந் தீர்த்தீரானுல்
பிள்ளைகளைப்பெற்றுஎந்தனய்யா பெரிய வாழ்வுகள் வாழ்ந்திடுவீர்
பெரியசமுசாரி முத்தணனும் பிடித்துத்தள்ளுரார் கட்டபொம்மை
கொண்டுவந்துதண்ணீர் தாகந்தீர்த்தான் கூலிக்குழுதவன் குப்பணனும்
படுத்திருந்தவர்ஊமத்துரை பார்த்துயிருந்தாரிச் செய்தியெல்லாம்
பொல்லாத கோபங்க ளுண்டாகி பொறிப்பறக்குதாங் கண்களிலே
முத்தணத்தேவரைத் தானழைத்து மும்மரமாகவே ஊமத்துரை
முத்தணத்தேவரு சொத்தையெல்லாம் முன்கோபத்துட னெழுதிவைத்
அண்ணனுக்குத்தாகந்தீர்த்ததினுல் அன்புடன்குப்பணத்தேவருக்கு [தார்
பட்டாபிஷேகமுந் தான்முடித்து பட்டத்தரச னிரண்டுபேரும்

மல்லப்புரங்காடு தான்கடந்து மன்னரிருவரும் போகையிலே
இப்படிப்போகிற வேளேயிலே என்ன வகைமோசம் நேர்ந்ததய்யா
கோடையிடியும் பெருமழையும் குமுறிவருகுதாங் காட்டுக்குள்ளே
பெஷல் காற்று மழையதனுல் பிறிந்தாரண்ணனுந் தம்பியுமாய்
அண்ணனுந்தம்பி யிரண்டுபேரும் ஆளுக்கொருபக்கந் திசைதவறி
கட்டபொம்முதம்பி ஊமத்துரை கன்னிவாடியில் போயிருந்தார்
போனவிடமுந் தெரிகிலேனே போரு விஜயனே ஊமத்துரை
என்னநான்செய்குவேன்கட்டபொம்மு இப்படிக்காலமும்வந்ததடா
ஊமத்துரையவுங் காணுமென்று உயிருகிடந்து துடிக்கிதடா
கூடு விட்ட குலவிபோலே கொண்டுபொம்மு மக்கள் போனுமடா
இப்படியாக வழுதுகொண்டு என்னசெய்கிருர் கட்டபொம்மு
தொண்டமான் புதுக்கோட்டை ராஜனிடம் துரைமகன் கட்ட
[னடைக்கலமாய்
அடைக்கலம்வந்தேனே கட்டபொம்மு ஆதரிப்பதுவு முன்கடமை
அஞ்சவேண்டா மயங்கவேண்டாம் ஆதரிக்கிறேனுன் மான்ராஜா
மகரநோம்புகல் சாவடியில் மன்னனேயங்கே யிருக்கவைத்தார்
இப்படித் தந்திரஞ் செய்தபின்பு எப்படிக்காரியஞ் செய்யலுற்ருர்.

தொண்டமான் புதுக்கோட்டை மான்ராஜா தர்பார்.

இராகம்—கேதார கௌளம். தாளம்—ரூபகம்.

பல்லவி

ஆறுமா முகா குகா தெய்
வானே பாகனே அருமறை துதிபுரி (ஆ)

அரஹர சரவண பவனெனும் மரகத
மயிலுறை வரதனேதிரு (ஆ)

அருட்பரங் கிரிக்குள்ளன்பருக்
கருளுதவிய பிரணவ (ஆ)

அமரர்கள் தினம் அன்புற்றே
அடியினேத் தொழ இன்புற்றே
அவுணர்கள் மிகத் துன்புற்றே
அலறியே விழ அயிலேவிய திரு (ஆ)

ஆகமவேத வசிகர யோக சிகாமணி
யாகிய திரு (ஆ)

அனுபல்லவி

பாரினி லன்பர் பாவம்போக்கியே
பாதுகா நீதவா
பழனிமலைக் கடவுளெனவரும் (ஆ)

சரணம்

சீருடன் காவில் சென்ற சீமானே
தேவி வள்ளியின் தினைமா வுண்டோனே
சீருடன் கையில் ஜெயவேல் கொண்டோனே
சிற்பரா தற்பரா
செந்தே னொழுகிடும் கதிர்காமத் தாதைக்கி
மந்திரம் தான்சொன்ன போதா
சாமிக் கண்ணுதுதி தாமரைப் பாதா
தீதுக ளதனைத் தீரும் புனீதா
சேவலா ஆவலாய்
சின்னத் தம்பியின் செந் தமிழணி (ஆ)

தன்னனாச் சந்தம்.

அடைக்கலமாய்வந்த கட்டனுக்கு அன்புடன்வார்த்தைகள் தானுரைத்து
தீரன்கட்டனைப் பிடித்துத்தந்தால் சீமைசுயராஜிய மாளலாமே
கட்டபொம்மனிங்கு வந்ததினுல் கட்டியுமாளலாம் பட்டணத்தை
பசித்துவந்ததோர் கட்டனுக்கு பாலும்பழமுமே தான்கொடுத்தார்
உண்டுபசியாரி கட்டபொம்மு உண்மைரகசியஞ் சொல்லலுற்ருர்
காதுற்றுக்கேட்டாரா மான்ராஜா கடுந்துயோசனை செய்தபின்பு
காவல்காரரிடந் தானுரைத்து காவலுஜாரா யிருங்களென்று
தீரன்கட்டனைப் பிடித்தேனென்று சென்னைக்கு லெட்டரெழுதுகிருர்.

வசனம்.

தொண்டமான்புதுக்கோட்டை மான்ராஜா சென்ன பட்டணம் கண்டாங்கி ஜெனரல்துரை அவர்களுக்கு, கட்டபொம்மை பிடித்துவைத்திருக்கிறேனென்று லிகித மெழுத, துரைமார்கள் பார்த்தவுடன் புறப்பட்டு வந்து, கால்விலங்கு கைவிலங்கு மாட்டி எத்தனையோ தூக்கில் போட்டும், அவர்கள் தூக்கினதில், தூக்கு எரிந்து விழுந்து, பின்பு கயற்று ஆற்றினில் கட்டப்புளியில் தூக்கிவிடுகிறார்கள்.

அகவல்

எட்டுத்திசையும் பதினாறுகோணமும்
கட்டியரசாண்டதை நினைந்தழுவனே

எட்டியாபுரத்து எட்டப்பராஜன்
இடஞ்சல்செய்ததை நினைந்தழுவனே

எடுத்துவளர்த்திட்ட பாதர்வெள்ளை
இறந்ததை நினைந்தழுவனே

இங்கிலீசுக் காரர்செய்த
இம்சையை நினைந்தழுவனே

தானபதிப் பிள்ளைசெய்த
தன்கொடுமையை நினைந்தழுவனே

மல்லப்புரங் காட்டினில்
மாறுபாடானதை நினைந்தழுவனே

தம்பியை யான்பிரிந்த
தன்மையை நினைந்தழுவேனே

புதுக்கோட்டை மான்ராஜா
பிடித்துத் தந்ததை நினைந்தழுவனே

ஆயிரங்கம்பளம் நூறுபரிவாரத்துடன்
அரசாக்ஷிசெய்ததை நினைந்தழுவனே

க்யற்று ஆற்றினில் கட்டப் புளிதன்னில்
கட்டபொம்மு உயிர் போவதை நினைந்தழுவனே

தன்னச் சந்தம்.

என்னையாண்டவளே சக்கம்மாளே இப்படிமோசங்கள் வந்ததென்று
எந்தனுக்குத்ரோகஞ் செய்தவர்கள் எப்படிவாழ்வாரோ பூமியிலே
நாட்டுக்கதிபதிகட்டபொம்முநரிக்கொம்பெடுத்துத்தானெறிந்தார்
மலையாளதேசத்தில் கற்றுவந்த மந்திரவாளை எடுத்தெறிந்தார்
காலமுடிந்ததென்றேநினைந்து கவர்மெண்டார்போட்டதூக்கதனில்
இம்சையைநினைந் தழுதுகொண்டு எமலோகஞ்சேர்ந்தாராங்
[கட்டபொம்மு
உத்தமன்கட்டனைத்தூக்கிவிட்டார் ஊமத்துரைசண்டைசொல்லுகிறேன்.

கன்னிவாடி யரண்மனையில் ஊமத்துரை தர்பார்.

இராகம்—பைரவி.

பல்லவி.

பரசிவ சம்போ அரன்பாலகா
பணிந்தேன் கனிந்தேன் நினைந்தேன்
படிமிசை துதி பரசிவ சம்போ (அர)

அனுபல்லவி.

பண்டார வைதீகா பஞ்சா க்ஷரத்யாகா
பாடிக்கொண் டாடினேன்
தேடிப் பலவினை தவிற் பரசிவசம்போ (அர)

வள்ளிமணவாளா மாதுமையல்சீலா
மாரா செந்தூரா மயில்வீரா
மகிதலமுறு பரசிவசம்போ (அர)

விண்ணவர்க் காதாரா வெற்றிகொள்ளுந்தீரா
வேலா விசாலா அனுகூலா
விமரிசைமிகு பரசிவ சம்போ (அர)

தாசன்சின்னத் தம்பிசொல் தண்டமிழ் கேளீயருள்
சுவாமியே பானமைநீ வாமியே
தனமருவியே பரசிவசம்போ (அர)

வசனம்

கண்டாங்கிஜெனரல் துரையவர்கள் கட்டபொம்மைப் பிடித்துத் தூக்கியபின் எட்டியாபுரத்தாரிடம் துப்பறிந்து ஊமத்துரையை கன்னிவாடியில் ஏமாற்றிக் கவுள்மோசமாக ஊமத்துரையைப் பாளையங்கோட்டை ஜெயிலிலடைத்து பின்னால் இருபேருக்கும் போர்நடக்குதல்.

தன்னனச் சந்தம்.

என்னுடன்பிறந்தஎந்தனண்ணு எவ்விடம்போனீரோ யானறியேன்
கன்றிழந்த பசுப்போலே கதறியழுகிறே னூமத்துரை
இறப்பதுநிச்சயமெந்தனண்ணு-யினிப் பிறப்பதுபூமியில் நிச்சயமா
இப்படியாக வழுதுகொண்டு இருக்கிறூர்சின்னையா வரண்மனையில்
கட்டனைப்பிடித்துத் தூக்கிவிட்டு கண்டாங்கிஜெனரல்மேஷர்துரை
பாவாடைப்பட்டாளந் தன்னுடனே பாதாளப்பீரங்கி தானெடுத்து
கன்னிவாடிசென்றுஜெனரல்துரைகட்டபொம்முதம்பிஊமையிடம்
ஜில்லாக்கள்பூராவுமாண்டுவருகிறசீமைத்துரைமகள்ராணியம்மாள்
திக்குவிஜயனுங் கட்டனுக்கு சின்னநவாப்பென்று பட்டந்தந்து
தெக்ஷணபூமியில் வைத்திருக்கார் தீராதிதீரனுங் கட்டபொம்மை
பேர்போன ஊமையைக் கொண்டுவந்து பெரியநவாப்புப் பேர்கொடுக்க
உத்தரவுதந் தனுப்பிவைத்தார் உலகத்தையாளும்விக் டோரியம்மாள்
கட்டுக்கடங்காத ஊமையனை கண்டாங்கிஜெனரல் கொண்டுவாரார்

இரும்புச்சங்கிலி மாட்டியேதான்
இங்கிலீசுக்காரர் சட்டப்படி

சிங்கத்தைக் கொண்டு வருவதுபோல்
சென்னைத் துரைமார்கள் கொண்டுவாரார்

பதினாறு சங்கிலி மாட்டியேதான்
பாளையங் கோட்டைக்கிக் கொண்டுவாரார்

ஆடுமேய்த்துநின்ற சந்தனக் கோனாரு
அண்ணனிறந்ததைச் சொல்லலுற்றார்

காதுற்றுக் கேட்டாரா மூமத்துரை
கணக்கி லடங்காத கோபங்கொண்டு

பதினாறு சங்கிலியைத் தானறுத்து
பட்டாளஞ் சண்டை நடத்தலுற்றார்

பட்டாளஞ் சண்டை நடக்கும்போது
பட்டாவாள் தவறிக் கீழ்விழுக

பட்டாவாள் கீழே விழுந்ததினால்
பதறியழுகிறார் ஊமத்துரை

அண்ணனிறந்த கவலையினால்
அழுதுபுலம்புறார் ஊமத்துரை

சத்தியஞ் செய்தேனே சண்டாளன்
தாட்டியன் சண்டையுஞ் செய்யலாமா

இப்படிக் கவுள்மோசஞ் செய்தாரென்று
ஏங்கியழுகிற வேளையிலே

பாளையங் கோட்டை ஜெயிலதனில்
பாங்குடன் லாக்காப்பு செய்துவைத்தார்

வசனம்.

பாளையங்கோட்டைக்கி ஊமத்துரையை துரைமார்கள் பிடித்துக்கொண்டு போகும்பொழுது, ஊமத்துரை சண்டைசெய்ய, பட்டவாள் தவறிக் கீழ்விழுக, விழுந்த பட்டாவாளை, பருத்தி எடுக்கவந்த கசனம்பட்டி

முத்திருளி பட்டாவாளைக் கையிலெடுக்க, சக்கம்மாள் பிடித்துக்கொண்டு பேயாடுதல்.

முத்திருளி பேயாட்டம்—தெம்மாங்கு.

(பெண்) மானே மறந்தேனடா மயிலாடும் பாறையிலே
உன்னைமறந்தேனடா ஏசாமியே நான்
இன்னொருவன் மய்யலிலே, தில்லலே லே லே லே லோ
தன்னன ஞனே ஞனே (மானே)

(ஆண்) மானேமறந்தேனடி மாமதுரைச்சந்தையிலே
உன்னைமறந்தேனடி ஏ சண்டாளி நான்
இன்னொருத்திமய்யலிலே தில்லலே லே லே லே லோ
தன்னன ஞனே ஞனே.

(பெண்) மம்பட்டி தோளிலிட்டு மடைதிறக்கப் போறசாமி
மடையைத் திறந்திடுங்கள், ஏ சாமியே
மயிலுவந்து நீராட, தில்லலே லே லே லே லோ
தன்னன ஞனே ஞனே.

(ஆண்) வாருவாரா யந்தகாதி வாடிப்பட்டியைக் கெடுத்காதி
நாளிப்பணங் கொடுத்திட்டாலும் ஏ சண்டாளி
மூளிப்பட்டம் போகாதடி தில்லலே லே லே லே லோ
தன்னன ஞனே ஞனே.

(பெண்) வைக்கப் படப்புப்போலே வாதனூறு செக்குபோலே
சீவிலிபுத்தூர் யானைபோலே ஏ சாமியே உன்னை
தேடிப்பிடித்தேனடா தில்லே லே லே லே லோ
தன்னன ஞனே ஞனே.

(ஆண்) மூலியு மூலியுங் கூடிக்கொண்டு
முருங்கமரத்திலே ஏறிக்கொண்டு
நாட்டுமூலிக்குச்சிட்டுவிழுந்ததாம் ஏ சண்டாளி
நம்மல்மூலிக்குக் கொண்டாட்டமாம் தில்லலே லே லே லே லோ
தன்னனனே தன்னனனே

(பெண்) பருத்தி எடுக்கயிலே பலநாளுஞ் சொன்னமச்சான்
ஒருத்தி எடுக்கயிலே ஏ சாமியே எனக்கு
எப்படியோ வருகுதைய்யா தில்லலே லே லே லே லோ
தன்னன னனே னனே

(ஆண்) ஆசை கொடுக்குமடி ஆனந்தத்தை யூட்டுமடி
பாசத்துக் கேற்றவண்டி ஏ சண்டாளி
பாடிவாரேன் சாமிக்கண்ணு தில்லலே லே லே லே லோ
தன்னனே தன்னனனே

தன்னனச் சந்தம்

வாங்க வாங்களடி தங்கைகளே
வந்துவதிசயங் கண்டேனடி

பருத்திஎடுக்கிற வேளையிலே
பட்டாக்கத்தியைக் கண்டெடுத்தேன்

பட்டாக்கத்தியைத் தானெடுக்க
பதறிவருகுதடி எந்தனுக்கு

மேகத்திலிடிக்கு மின்னலைப்போல்
மின்னிவருகுதடி தங்கைகளா

என்னமோஎனக்குத் தோணவில்லை
எடுத்துவாங்களடி தங்கைகளா

அக்காளுந்தங்கை எடுக்கும்போது
ஆடாதபேய்வந்து ஆட்டுதைய்யா

எட்டியாபுரம் ஜெமீன்தர்பார்.

பூமிபுகழுமலை—என்றமெட்டு

ஞானமுணர்ந்த குரு நன்மைதரும் மவுணகுரு
ஆனந்தபுனித சற்குரு அவ்தாரக்குரு
ஆனந்தபுனித சற்குரு. (ஞான)

தீனதயாநிதியே சேவைதந்தாள் கதியே
தேவா வரப்பிரசாதியே செய்தேன் துதியே
தேவா வரப்பிரசாதியே. (ஞான)

வேதாந்த சாகரனே வேண்டுங்கு பாகரனே
பாதாரம் நம்பிவந்தனே நின்பாலகனே
பாதாரம் நம்பிவந்தேனே. (ஞா)

நீடும் சுகாதரனே நேமிபுகழ் மாதவனே
பாடுஞ்சாமிக் கண்கிதனே பாதம்பணிந்தேன்
பாடுஞ்சாமிக் கண்கிதனே. (ஞா)

தன்னனச் சந்தம்.

எட்டியாபுரத்தை யாண்டுவருகிற
எங்கும்புகழ்பெற்ற எட்டேந்திரன்

மங்களக்கண்ணுடி மேடைகளும்
மதுலபூத்திய கோட்டைகளும்

நாலுசுத்துக்கோட்டை காவலுடன்
நானுமரசாக்ஷி செய்துவாரேன்

பசித்துவந்தோரைப் பாதுகார்க்கும்
பட்டத்தரசனு மெட்டேந்திரன்

அண்டிவந்தோரை யாதரித்து
ஆண்டுவருகிறே னெட்டேந்திரன்

குடிபடைகளைப் பாதுகார்த்து
கோடியுங்கட்டின னண்டுவாரேன்

யானைபரிவாரச் சேனையோடு
மரசாக்ஷி செய்கிறே னெட்டேந்திரன்

தாசி சதுர்ப்போட்டு முன்னேநிற்க
தாட்டிய நானுங் கொலுவிருக்கேன்

இப்படி யாண்டு வரும்பொழுது
என்னென்ன செய்கிறு னூமத்துரை

மண்ணுலே கோட்டையுங் கட்டியேதான்
மங்கள காரியங் தான்முடித்து

மறுபடியுமே யாண்டுவாரான்
மட்டிலடங்காத ஊமததுரை

சென்னைக்கு லெட்ட ரெழுதுகிறேன்
தீராதி தீரனு னெட்டேந்திரன்

வசனம்.

கண்டாங்கிஜெனரல் மேஷர்த்துரை, ஊமத்துரையைக் கொண்டுவந்து, பாளெங்கோட்டை ஜெயிலிலடைத்தவுடன், ஊமத்துரைக்குக் கோபமுண்டாகி, ஆயிரங் கம்பளத்தையுந் தருவித்து பாளையங்கோட்டை ஜெயிலையுடைத்து, கண்டாங்கி ஜெனரல் துரையுடன் பட்டாளத்தையுங் கொன்று, பின்னால் மண்கோட்டை கட்டி தூத்துக்குடியில் மூத்தையா பாண்டிய னரண்மனையில், விவாஹமது செய்து, ஏழுவருஷ மரசாக்ஷி செய்துவரும்போது, எட்டியாபுரத்து எட்டேந்திரன், சென்னைக்கு லிகிதமெழுத, அக்கினிஜெனரல் புரப்பட்டு வந்து எட்டேந்திரனிடம் யோசனைகேட்டு, அக்கினி ஜெனரலும் ஊமத்துரையும் போர்புரிதல்.

தன்னனச் சந்தம்.

எட்டியாபுரத்தார் சொல்படிக்கி
என்னென்ன செய்கிறார் ஜன்னல்துரை

கீழ் சுறங்கத்தின் பாதைவழி
கிச்சுக்குடுக்கை யடிக்கிறாராம்

ஆயிரமூடை மிளகாய்வத்தல்
ஆங்காரமாகக் கொளுத்துகிறார்

அக்கினி பொருக்க மாட்டாமல்
ஆபத்து நேர்ந்தது வென்றுசொல்லி

இனிமேல் கோட்டையில் தானிருந்தால்
இடுக்கம் வந்துமே நேருமென்று

பத்தினி உத்தமிப் பெண்டுகளை
பாழுங் கிணற்றிலே தள்ளிவிட்டார்

சொல்ல முடியாத கோபங்கொண்டு
சுறங்கத்துப் பாதை யிருவருமாய்

அக்காளுந் தம்பி யிருவருமாய்
 ஆளுக்கொரு குதிரை மேலேஏறி
வெளியேறிப் போகிற வேளையிலே
 விரட்டி வாராருஞ் ஜென்னல்த்துரை
ஓட ஓட விரட்டிவாரார்
 ஊக்கம் பிறந்திட்ட ஜென்னல்த்துரை
பொருதிச் சண்டை நடத்துகிறர்
 போருவிஜயனு மூமத்துரை
எதிர்த்துச் சண்டை நடத்துகிறர்
 இங்கிலீசுக்காரர் பட்டாளங்கள்
குதிரைக் கால்தனில் கத்திகட்டி
 கொண்டுபொம்மு மகள் வெள்ளையம்மாள்
கண்மூடிக் கண்ணு திறக்குமுன்னே
 கணக்கில்லாப் பட்டாளம் வெட்டினளாம்
கும்பினிச் சண்டை நடத்தும்போது
 கூந்த லவிழ்ந்துமே கீழ்விழுந்து
புரவிக் கால்தனில் சிக்கிடவும்
 பொருக்க முடியாமல் ஊமத்துரை
கத்தியைக் கைதனில் தானெடுத்து
 கண்டந் துண்டமாக வெட்டிவிட்டார்
கண்கள் சிவந்துமே ஊமத்துரை
 கல்வண்டிப் பட்டாளம் வெட்டினராம்
பட்டாக் கத்தியைக் கையிலெடுத்துப்
 பாவாடைப் பட்டாளம் வெட்டினராம்
கும்பினிச் சண்டைகள் செய்துவிட்டு
 கோலாரு பட்டியாம் பாதைவழி
போரு விஜயனும் போகையிலே
 பொல்லாத காலமும் நேர்ந்ததினல்
புலியென்றுசுட்டானே புரவிதனை
 பொல்லாத வம்பனுஞ் ஜென்னல்த்துரை

புரவி இறந்ததைத் தானறிந்து
புத்தி சிதறியே ஊமத்துரை

பட்டாளம் வருவதைத் தானறிந்து
பதுங்கி ஓடினார் ஊமத்துரை

கண்டு விரட்டினர் ஜென்னல்த்துரை
கல்வண்டிப் பட்டாளந் தன்னுடனே

பெரிய வீராயி வீடுதேடி
பேர்போன ஊமயர் போயொளிந்தார்

ஓடியொளிந்திட்ட ஊமயர்க்கு
ஒஸ்க்கிப் பிராந்தியைத் தான்கொடுத்து

புத்தியை மெத்த மயக்கடித்து
பிடித்துத் தந்தாள் துரையிடத்தில்

அக்கினி ஜெனரல் மேஷர்த்துரை
ஆயிர ரூபாயைக் கைக்கொடுத்து

பெரிய விலங்கு தானடித்து
பேர்போன ஊமையனைக் கொண்டுவாரார்

சென்ன பட்டணம் போகையிலே
திண்டுக்கல் மலையில் தங்கிருந்து

தேன்பழனி யாண்டி சந்நதியில்
தீராதி தீரனும் வந்துநின்று

சுவாமி தெரிசனஞ் செய்யவென்று
துஷ்டக் குணமுள்ள ஊமத்துரை

ஓடிப் பிழைத்திட்டா ளென்மனைவி
ஒரு குறைவுமே நேராமல்

பாதுகார்க்க வேண்டும் ஷண்முகனே
பட்டந் தழைக்கப்பேர் சொல்லவேண்டும்

இப்படித் தெய்வத்தைத் தானினைந்து
எடுத்தார் பட்டாவா ளூமத்துரை

அக்கினித்துரைக் கபயமென்று
அனியாயக்கொலை செய்திறந்தார்

செத்து மடிந்தாரே ஊமத்துரை
சிவலோகஞ் சேர்ந்திட்டார் நேசர்களே

துஷ்ட னிறந்துமே போனனென்று
துக்கப்பட்டுக் கொண்டு ஜென்னல்த்துரை

சீமைக் கதிபதி ஜென்னல்த்துரை
சென்னைக்குத் திரும்பிப் போகலாமா

என்று நினைத்துமே ஜென்னல்த்துரை
ஏசு நாதரைக் கைதொழுது

சுத்தவீரமுள்ள ஜென்னல்த்துரை
துப்பாக்கிக் குண்டினுல் சுட்டுக்கொண்டார்

வீரமதயானைக் குட்டியைப்போல்
விழுந்திறந்தாராஞ் ஜென்னல்த்துரை

ஊமத்துரைக்கி வபயமென்று
உடனிறந்தாராஞ் ஜென்னல்த்துரை

இறந்து மடிந்தா ரிருவருமாய்
எமலோகஞ் சேர்ந்தாரே நேசர்களே

நாவல்ஸ்ப்ரகாரம் பாடியிருக்கேன்
நன்ருய்க் கவனிக்க வேண்டுமையா

சொல்குற்றம் பொருள்குற்றந் தானிருந்தால்
சோதரரே பொருத் தாளவேண்டும்

தவறித் தப்பிதந் தானிருந்தால்
தன்மை பொருத்தாள வேண்டுமையா

நாடெங்கும் நல்ல கியாதிபெற்ற
நந்தகோன் வம்சத்தி லேபிறந்த

ராமசாமிக் கோனர் தன்வயிற்றில்
நாமஞ் சொல்வதற்கென் றேபிறந்த

சாமிக் கண்ணுக் கோனருமே
சாற்றி வைத்தேன னிக்கதையை

பாரினில் யாவரும் பாடுதற்கு
பாடினேன் சாமிக்கண் ணிக்கதையை

விந்தையுடன் கட்ட பொம்முகதை
விபரந் தெரியும்படி பாடச்சொன்ன

சந்தனமணியந் தான்வாழி
சங்கம்மா மதுரைச் சொக்கர்வாழி

வாழி வாழி யனைகவாழி
வாசித்துப் பார்த்தோர்கள் தான்வாழி

பூமியில் யாவருங் கொண்டாட
போற்றி யெழுதினேன் வாழியதே.

P. RM. சாமிக்கண்ணுக் கோனார், அவர்கள் இயற்றிய
1, 2 பாகங்களமைந்த,
"புதிய பெரிய" கட்டபொம்மு கதை முற்றிற்று.

அநேக டாக்டர்களாலும், கனவான்களாலும் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற

V.M.S. அமிர்தசஞ்சீவிபற்பொடி

இப் பற்பொடியைத் தேய்த்து வருவதினால் எவ்வளவு கடூரமான பல்வலி இருந்தாலும் இப் பற்பொடியை தேய்த்து வெண்ணீர் வைத்துக் கொப்பளித்தால், 2, 3 வேளையில் உடனே நிற்கும். பாடகர்களுக்குச் சாரீரமும் நன்றாய் பேசும். சிறுவர், மாதர், ஆடவர், வயோதிகர் யாவரும் இப் பற்பொடியை தேய்த்துவரலாம். பல்லைச் சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது. வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். எமது புக்ஷாப்பில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

விலை டப்பா 1-க்கு அணா 2.

ச. சந்தன மணியகாரர், புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ் வடக்காவணி மூலவீதி, மதுரை:—37.

உ

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

அடியில்கண்ட எமது சொந்த ரிஜிஸ்டர் காபிரைட் புத்தகங்கள் வெளிவந்துவிட்டது.

P. RM. சாமிக்கண்ணுக்கோனர் அவர்களாலியற்றப்பெற்ற.

1.	பாஞ்சாலங்குறிச்சி ... யென்னும் வீர சிங்கங்களான 1, 2, பாகங்களமைந்த பூராக்கதைகள் படங்களுடன் அடங்கிய "புதிய பேரிய" கட்டபொம்மு கதை.	0—6—0
2.	பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு கதை பாதர் வெள்ளை சண்டை.	0—2—0
3.	...ர்மாவதாரன் வர்ணிப்பு.	0—1—0

...ரா. கன்னையா உபாத்தியாயர் அவர்களால் இயற்றப்பெற்ற,

1.	ஸ்ரீ க...ன் திருவிளையாடலில் ஒன்முன ருக்மணி கல்யாண வர்ணிப்பு.	0—2—0
2.	ஸ்ரீ...த் பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாதவாசமென்னும் விராடபர்வ கீசகன் சண்டை வர்ணிப்பு.	0—2—0
3.	ஸ்ரீமத் மஹாபாரதப்போரில் பதினேழாநாள் யுத்தமென்னும் கர்ணமகாராஜன் சண்டை வர்ணிப்பு.	0—8—0
4.	ஸ்ரீமத் மஹாபாரதப்போரில் பதினெட்டாநாள் யுத்தமென்னும் துரியோதனன் சண்டை வர்ணிப்பு.	0—4—0
5.	...ஜேந்திர மோக்ஷ வர்ணிப்பு.	0—1—0
6.	கெருட கெர்வபங்க வர்ணிப்பு.	0—1—0
7.	ஸ்ரீ கிருஷ்ணபகவான் தூது வர்ணிப்பு. ...	0—4—0
8.	சோலைமலை ஆதி உற்பத்தி யென்னும் மாயஅழகர் வர்ணிப்பு.	0—2—0
9.	மகா-௱-௱-ஸ்ரீ, பதினெட்டாங்கோட்டை சிதம்பரக்கவிராயர் அவர்களாலியற்றப்பெற்று ஏட்டுப்பிரிதிலிருந்ததை, ஸ்ரீ. ரா. கன்னையா உபாத்தியாயர் அவர்களால், மிகவுஞ் சீர்திருத்தி அமைக்கப்பெற்ற **ஸ்ரீமத் மஹாபாரதக் கும்மி.**	0—6—0

அதிசயமாய் மடிந்த ஐவர் கொலைச் சிந்து	0—1—0
அகஸ்தியர் அருளிச்செய்த வைத்தியக் கும்மி	0—1—0

ச. சந்தன மணியகாரர், புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.